# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 20. தொலைபேசி 23411

வள்ளுவர் ஆண்டு 2002, தை 20 உ (2-2-71) செவ்வாய் துல்ஹஜ் பிறை 5 புத்தகம் 25 இதழ் 12



## முக்கிய அறிவித்தல்

1971ம் ஆண்டுக்குரிய கலண்டரை 31-1-1971 ம் திகதிக்கு முன்னதாக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு பகுதியை அனுப்பி பெற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றோம்:

1. 50 மில்க் வைற் நீல சோப் மேலுறைகள்.
2. 10 பார் சோப் மேலுறைகள்.
3. 10 சலவைப் பவுடர் மேலுறைகள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.


# சமஷ்டிக்கு கனடா பிரதமர் பேராதரவு!

ஒரு நாட்டின் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு சமஷ்டி அரசியலமைப்பு முறையே சிறந்த மார்க்கமாகும். உள் நாட்டு இன பேதங்களையும் மொழிப் பிரச்சினை மட்டுமன்றி பல்வேறு சிக்கல்களையும் தீர்க்கும் ஒரு சிறந்த அரசியல் முறையே சமஷ்டி அமைப்பாகும்.

இவ்வாறு சென்ற கிழமை இலங்கைக்கு வருகை தத்திருந்த கனடா நாட்டுப் பிரதமர் திரு. பியரி எலியட் ட்ரூடோ கருத்து தெரிவித்துள்ளார்.

கனடாப் பிரதமரின் வருகையை முன்னிட்டு சென்ற வார சுதந்திரன் இதழில் கனடா நாட்டு சமஷ்டி அரசியலமைப்பு முறை பற்றியும் அங்கு சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகள் பற்றியும் விசேட கட்டுரையொன்று வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

சமஷ்டி ஆட்சி நடைபெறும் கனடாவிலுள்ள சிறுபான்மை இனமான பிரெஞ்சு இனத்தவரே இங்கு வந்திருந்த கனடாப் பிரதமர் திரு: பியரி எலியட்ரூடோ என்பது குறிப்பிடத்தக்கது.

அலரிமாளிகையில் 28-1-71ல் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சமஷ்டி ஆட்சி பற்றிக் கேட்கப்பட்டபோதே மேற்கண்டவாறு அவர் பதிலளித்தார்.

'பல இன, பல மத மக்கள் வாழும் கனடாவைப் போன்ற ஒரு நாட்டில் எப்போதும் உள் நாட்டு நெருக்கடி இருக்கத்தான் செய்யும். இந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு சமஷ்டி ஆட்சி முறை ஒன்றுதான் வழியாகும். ஒற்றையாட்சி முறையை ஏற்படுத்த முயன்றால் நாடு பல கூறுகளாகி விடும்!'

என்றும் கூறியிருக்கிறார் கனடாப் பிரதமர்.

இருமொழி பேசும் மக்கள் வாழும் இலங்கைக்கும் சமஷ்டி அரசியலமைப்பே ஏற்றது என்பதை இதன் மூலம் மறைமுகமாக கனடாப் பிரதமரும் வலியுறுத்தியிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன;

புதிய அரசியல் திட்டம் பற்றி அரசியல் நிர்ணய சபை ஆராயவிருக்கும் இத்தருணத்தில் கனடாப் பிரதமரின் அறிவுரை இலங்கை அரசின் காதில் ஏறுமா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

## தமிழ் விரோதிகளுடன் தமிழ் துரோகிகள் கூட்டு!

தமிழ் விரோதிகளான ஐ. மு: ஆட்சியாளர்களுடன் இரண்டறக் கலப்பதற்கு தமிழ் காங்கிரஸ் பா.உ.க்கள் மூவரும் தீர்மானித்துவிட்டார்களாம்! இது எதிர்பார்க்கப்பட்டதே! தமிழ் மக்களுக்கு எதிராக செய்யப்பட்டுவரும் ஒவ்வொரு அநீதிக்கும் இனி இந்த மூன்று தமிழ் துரோகிகளும் உடந்தையாக இருக்கப்போகிறார்கள்.

தமிழ் காங்கிரசே! உன் மறுபெயர் தமிழ்த்துரோகம் என்பதா?

## டாக்டருக்கு 'வைத்தியம்!'



யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் பேசிய சமசமாஜக் கட்சித் தலைவரும் நிதியமைச்சருமான டாக்டர் என். எம். பெரேரா அவர்கள், 'உங்களுக்கும் (தமிழர்களுக்கும்) எங்களுக்கும் (சிங்களவர்களுக்கும்) என்ன வேற்றுமை? நாம் அனைவரும் ஒரே குடும்பத்தினர்கள் என்று கூறியிருக்கிறார்!

டாக்டர் என்: எம். அவர்களே! நீங்கள் ஒரு சிங்களவர் என்ற காரணத்தால் இந்நாட்டின் நிதியமைச்சராக வரமுடிகிறது. உங்கள் தோழரான பி. நாகலிங்கத்தினால் அந்த இடத்துக்கு எப்போதாவது வரமுடியுமா? முடியாது. ஒருபோதுமே முடியாது காரணம் அவர் ஒரு தமிழர்!

திருமதி சிறிமாவோ ஒரு சிங்களவரானதால் நாட்டின் பிரதமராக வரமுடிகிறது. ஆனால் உங்கள் தோழர் விசுவநாதன் பிரதமராக முடியுமா? முடியாது. ஒருபோதுமே முடியாது. காரணம் அவர் ஒரு தமிழர்!

இப்போது வேற்றுமை புரிகிறதா டாக்டர் அவர்களே! இன்றைய அரசியலமைப்பில் நீங்கள் ஆளும் சாதி; நாங்கள் ஆளப்படும் சாதி!

## தமிழினத்தின் காவல் தெய்வம்

### அண்ணா



நீ வங்கக் கடலோரம் மீளாத்துயில் கொள்ளத் தொடங்கி நாளையுடன் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன! நம்பவே முடியவில்லை!

ஏனெனில்,

நீ தமிழர்களின் உயிரோடு, உணர்வோடு ஊனோடு, சங்கமமாகி விட்டாய்!

நாம் விடும் ஒவ்வொரு மூச்சிலும் நீ கலந்து இருக்கிறாய்—நம் சிந்தனை அணு ஒவ்வொன்றிலும் நீயே நர்த்தனமிடுகிறாய்!

உன்னை எண்ணிடும் போது விடுதலைப் பேருணர்ச்சி நம் உடலெங்கும் விரவுகிறது!

உன்னை நினைத்திடும் போது எளிமை, கனிவு, அடக்கம், அமைதி, துணிவு, அறிவு, தெளிவு சால்பு—எல்லாமே நம் நினைவுக்கு வந்திடுகிறது!

உன் பெயரை உச்சரித்திடும் போது புதுசக்தி பிறக்குது நம் மூச்சில்!

நீ கொளுத்தி விட்ட அறிவுச் சுடர்—விடுதலைத்தீ—தமிழனின் உள்ளத்தில் கனன்று கொண்டிருக்குமட்டும் அவனை யாரும் அழித்துவிட முடியாது!

நீயே உலகெங்கும் வாழும் தமிழர்களின் காவல் தெய்வம்—நீயே வழிகாட்டி—நீயே கலங்கரை விளக்கம்!

உன் வழி நடப்போம்—உலகெங்கும் தமிழ் மொழிக்கு பெருமை சேர்ப்போம்—இது உறுதி அண்ணா!

...தம்பி கோவை

## சோசலிசமாம் சோசலிசம்...!

வேற்றுநாட்டு அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், இலங்கை அரசாங்கத்தின் விருந்தினராக இங்கு விஜயம் செய்யும்போது அவர்களுடைய வருகை பற்றியும் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி நிரல் பற்றியும் ஒரு சிறு கைநூல் ஒன்றை பிரதமரின் நேரடி மேற்பார்வை

(2-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## கனடாப் பிரதமரின் காலமறிந்த உதவி!

தன்னலங்கருதாது இலங்கைக்கு பல்வேறு உதவிகளையும் செய்துவரும் ஒரு நாடு கனடா. இலங்கையின் நல்வாழ்வை, இலங்கை மக்களின் முன்னேற்றத்தை உளமார விரும்பும் இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு கனடா.

அமெரிக்காவோ, ரஷியாவோ இலங்கைக்கு உதவிசெய்யும்போது அதற்கு வேறு அரசியல் ரீதியான உள் நோக்கங்கள் கற்பிக்கப்படுவதுண்டு. ஆனால் கனடா இலங்கைக்கு வழங்கும் உதவி பற்றி உள்நோக்கம் கற்பிக்க யாராலும் முடியாது. இலங்கையிடமிருந்து எவ்வித கைமாற்றையும் எதிர்பார்க்காது கனடா உதவிபுரிந்து வருவதை எவருமே ஒப்புக்கொள்வர்.

சென்ற கிழமை இலங்கைக்கு வருகை தந்திருந்த கனடாப் பிரதமர் திரு. பியரி எலியட் ட்ரூடோ அவர்கள் இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலையை நன்குணர்ந்து, இலங்கைக்கு வட்டியில்லாமல் இரண்டு கோடி ரூபா கடன் உதவியை வழங்கிவிட்டு சென்றிருக்கிறார்!

ஆனால் எம்மைப் பொறுத்தவரை பொருளாதார நெருக்கடியை உத்தேசித்து கனடாப் பிரதமர் நம்நாட்டுக்கு வழங்கிய வட்டியில்லாக் கடனைவிட நம்நாட்டு அரசியல் நெருக்கடியைத் தீர்க்க மறைமுகமாக அவர் வழங்கிச் சென்ற மற்றோர் முக்கிய அரசியல் அறிவுரையையே விலைமதிப்பற்ற உதவி என்று கருதுகிறோம்:

ஆம், கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் கனடாவில் நடைபெறும் சமஷ்டி ஆட்சி முறை பற்றிக் கேட்கப்பட்டபோது, கனடாப் பிரதமர் அளித்துள்ள பதில் சமஷ்டி அரசியலமைப்பு பற்றி இந்நாட்டில் பெரும்பான்மைச் சிங்களவர் மத்தியில் பரப்பப்பட்டுள்ள தப்பபிப்பிராயங்களையும் பொய்ப்பிரசாரங்களையும் தகர்த்தெறிவதாக அமைந்துள்ளது:

கனடா சமஷ்டி அரசியலமைப்பு வெற்றிகரமாகச் செயல்படும் ஒரு நாடு. அந்நாட்டில் பெரும்பான்மை மக்களான ஆங்கிலம் பேசும் மக்களுக்கும், சிறுபான்மையினரான பிரெஞ்சு பேசும் மக்களுக்கும் சமஷ்டி அரசியலமைப்பின்கீழ் சம உரிமை தரப்பட்டிருக்கிறது - பிரெஞ்சு பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் கியூபெக் மாகாணம் தன்னாட்சி அமைப்பாக விளங்குகிறது. சிறுபான்மை இனத்தினர் மொழியான பிரெஞ்சு மொழிக்கும் பெரும்பான்மையினர் மொழியான ஆங்கிலத்துக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. இரு மொழிகளுமே ஆட்சி மொழிகளாக விளங்குகின்றன:

கனடா அரசியலமைப்பிலுள்ள தாராள போக்கினால் அங்கு சிறுபான்மை மக்கள் மனநிறைவுடன் பெரும்பான்மையினருடன் இணைந்துவாழ முடிகிறது. சிறுபான்மையினர் நாட்டின் பிரதமராகக்கூட வரமுடிகிறது.

ஆம், இங்கு வருகை புரிந்திருந்த கனடாப்பிரதமர் இனத்தால் ஒரு பிரெஞ்சுக் கனேடியர்—சிறுபான்மை இனத்தவர் — என்பதுகுறிப்பிடத்தக்கது!

பத்திரிகையாளர் மாநாட்டில் கனடாப் பிரதமர் கூறியதுதான் என்ன?

**பல இன பல மத, மக்கள் வாழ்கின்ற கனடாவைப் போன்ற ஒரு நாட்டில் எப்போதும் உள்நாட்டு நெருக்கடிகள் இருக்கத்தான் செய்யும். இந்த நெருக்கடிகளை தீர்ப்பதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பு முறை ஒன்றுதான் கனடாவுக்கு உள்ள வழி. ஒற்றையாட்சி முறையை ஏற்படுத்த கனடா முயன்றால் நாடு பல கூறுகளாகிவிடும்.**

—இப்படிக் கூறியிருக்கிறார் கனடாப் பிரதமர்: இலங்கை தனது புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கவிருக்கும் இத்தருணத்தில் கனடாப் பிரதமரின் இந்த அறிவுரை இலங்கையின் அரசியல் நோய்க்கு தக்க மருந்தாக அமைந்திருக்கிறது.

கனடாவும் இருமொழி பேசும் மக்கள் வாழும் நாடு!

இலங்கையும் இருமொழி பேசும் மக்கள் வாழும் நாடு!!

கனடாவிலும் உள்நாட்டு நெருக்கடிகள் பல ஏற்பட்டு அந்த நெருக்கடிகளை தீர்க்கும் மாமருந்தாக சமஷ்டி அரசியலமைப்பினைத் தேர்ந்தெடுத்தார்கள். சிறுபான்மை இனத்தவர்களுக்கும், அவர்களது மொழிக்கும் சமஷ்டியின் மூலம் சம அந்தஸ்தும் சமவாய்ப்பும் கிடைத்தன. தேசிய ஒற்றுமை மலர்ந்தது. இதனால் கனடாவில் ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடியையும் பூசல்களையும் கட்டுப்படுத்த முடிந்தது! கனடா சுபீட்சப் பாதையில் முன்னேறவும் இலங்கை போன்ற நாடுகளுக்கு கடனுதவி கொடுக்கும் அளவுக்கு பொருளாதார பலம்பெறவும் முடிந்தது.

இலங்கையிலும், வெள்ளையன் இந்நாட்டைவிட்டு வெளியேறிய நாள்தொட்டு உள்நாட்டுப் பூசல்களும், தமிழ் சிங்கள இனக்கலவரங்களும் நெருக்கடிகளும் இருந்துகொண்டேயிருக்கின்றன. சிறுபான்மை இனமான தமிழ்பேசும் இனத்தின் ஒன்றுபட்ட சமஷ்டிக் கோரிக்கையை சிங்களப் பெரும்பான்மை இனம் ஏற்றுக்கொள்ள மறுத்துவருகிறது. ஒற்றையாட்சி அரசியலமைப்பின்கீழ் தமிழ்பேசும் சிறுபான்மை இனத்தை அழித்தொழித்திடும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர் பெரும்பான்மை இனத்தினரான சிங்களத் தலைவர்கள். இதை எதிர்த்து வாழ்வா சாவா என்று ஜீவமரண உரிமைப் போராட்டத்தில் தமிழினம் ஈடுபட்டிருக்கிறது!

இந்நாட்டில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டிடவும், இரு இனங்களும் சமத்துவமாக-ஒரு இனத்தை மற்ற இனம் அழித்துவிடும்; ஒரு மொழியை மற்றமொழி விழுங்கிவிடும் என்ற அச்சமின்றி, வாழவும் இருக்கும் ஒரே வழி கனடாவைப் பின்பற்றி இங்கும் ஓர் சமஷ்டி அரசியலமைப்பினை உருவாக்குவதேயாகும்:

## '1958-ம் ஆண்டுத் தமிழ் சட்டத்தையும் அரசியல் திட்டத்திலிருந்து அகற்றுக'

### அரசாங்கப் பிரமுகர்களின் ஆதரவுடன் புதிய கூக்குரல்!

அரசியல் திட்ட வரைவு அடிப்படைத் தீர்மானங்களில் ஒன்றாக 1958ம் ஆண்டின் தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தையும் கண்துடைப்புக்காக அரசாங்கம் சேர்த்திருக்கிறதல்லவா! இந்தச் சட்டத்தையும் அதிலிருந்து அகற்றிவிடவேண்டுமென்றும், புது அரசியலமைப்பில் சிங்களம் மட்டும் சட்டமே இடம்பெறவேண்டுமென்றும் ஒரு புதியகோஷம் அரசாங்கக் கட்சி பிரமுகர்களால் எழுப்பப்பட்டுள்ளது;

இந்தச் சட்டத்தை அரசியலமைப்புத் தீர்மானங்களிலிருந்து அகற்றும்படி கோரிக்கிளர்ச்சி நடத்துவதற்கென முன்னாள் நீதியரசரும் அரசாங்கக் கட்சி ஆதரவாளருமான திரு: ஹேமா பசநாயகா தலைமையில் 'சிங்கள எக்சத்த மத்திய பல மண்டலய' என்றொரு ஸ்தாபனம் அண்மையில் கொழும்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோஷத்தை ஆளுங்கட்சியே பின்னின்று முடுக்கிவிடுவதாகவும், தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கு நொண்டிச் சாட்டுக் கூறுவதற்கு இது பயன்படுத்தப்படும் என்றும் அறியப்படுகிறது.

''இவ்வளவு தருவதையே சிங்கள மக்கள் எதிர்க்கிறார்கள்: இந்நிலையில் மேற்கொண்டு மேலதிக சலுகைகளை எப்படி எம்மால் தர முடியும்...'' என்று பின்னர் பதிலளிப்பதற்கு அரசாங்கம் செய்துள்ள 'முன்னேற்பாடு' இதுவென்று வர்ணிக்கப்படுகிறது!

## யாழ் நகரில் அண்ணா அஞ்சலி!

அறிஞர் அண்ணா அவர்களுக்கு அஞ்சலிசெய்யும்முகமாக அண்ணா மறைந்த நாளாகிய 2-2-70ல் யாழ் நகர மண்டபத்தில் அஞ்சலிப் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்துக்கு முன்னாள் யாழ் மேயர் திரு. நாகராசா தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் தமிழரசுப் பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம் க. பொ. இரத்தினம் பா. உ. அடலேறு மு. ஆலாலசுந்தரம் உட்பட பலர் பேசுகிறார்கள்.

## சோசலிசம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் செயல்படும் வெளிவிவகார அமைச்சு வெளியிடுவது வழக்கம். ஆனால் 'சோசலிசம்' பேசும் ஐ. மு. அரசு பதவிக்கு வந்த நாள் தொட்டு சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே இவை வெளியிடப்பட்டு வருகின்றன: தமிழில் இது வெளியிடப்படுவது இல்லை. இந்த உண்மையை அரசாங்கத்தின் ஊதுகுழல் தினபதியே 24-1-71 சுட்டிக்காட்டியிருக்கிறது.

'அரசாங்கம் ஆங்கிலத்தைக் கைவிடப்போகிறது: எல்லாக் காரியங்களும் சிங்களத்திலும் தமிழிலும் தான் நடைபெறும் என்று கூறப்படுகிறது. அப்படியானால் தமிழ் எங்கே? இப்படி தினபதியாரே கேட்டிருக்கிறார்!

நாம் கேட்கிறோம் — இது தானா சோசலிசம் என்று!

## உருத்திரபுரத்தில் அண்ணா அஞ்சலி!

உருத்திரபுர இளைஞர்கள் இம்மாதம் 6ம் திகதி உருத்திரபுரம் சந்தை மைதானத்தில் அண்ணா அஞ்சலிக் கூட்டம் நடத்துகின்றனர். கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் பேசுவர். திரு: வே. கணேசபிள்ளை தலைமை வகிப்பார்.

## தமிழரசு பொதுச்சபை இன்று கூடுகிறது!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அதி முக்கியத்துவம் வாய்ந்த பொதுச் சபை, மத்திய செயற்குழுக் கூட்டங்கள் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிப் பணிமனையில் நடைபெறுகின்றன.

தமிழரசுக்கட்சி அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானங்களுக்கு கொண்டுவரவிருக்கும் திருத்தங்கள் பற்றியும் அவை நிராகரிக்கப்படின், கட்சி எடுக்க வேண்டிய அடுத்த நடவடிக்கைகள் பற்றியும் இப்பொதுக் குழு திட்டவட்டமாக முடிவு எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சியின் பிரசாரக் கூட்டமொன்று இன்று மாலை ஏழாலையில் நடைபெறவிருக்கிறது; 17-2-71ல் வேலணையிலும் கட்சிப் பிரசாரக் கூட்டம் நடைபெறும்.

## தினபதியின் சகோதர ஏடு விஷம் கக்குகிறது!

1966ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி உபயோக விசேட விதிகள் சட்டத்தை உடனே இரத்து செய்யும்படி அரசாங்கத்தைவற்புறுத்தி 'தினபதி'யின் சகோதர சிங்கள ஏடான 'தவச' ஆசிரியத் தலையங்கம் தீட்டியுள்ளது. 27.1.71 இதழில் இத்தலையங்கம் வெளிவந்துளது. இப்பத்திரிகை அரசாங்கத்தின் ஓர் ஊதுகுழல் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழிச் சட்ட விதிகளை ரத்துசெய்யும்படி பலகாலமாகவே தவச பத்திரிகை வலியுறுத்தி வந்துள்ளதாகவும், தமிழ்மொழி உபயோகச் சட்டம் வருவதற்கு முன்னரே சிங்களமொழிச் சட்டம் அமுலாக்கப்பட வேண்டியிருக்கையில் அது அமுலாக்கப்படவுமில்லை; தமிழ்ச் சட்டம் ரத்துசெய்யப்படவுமில்லை என்று அத்தலையங்கம் குறிப்பிடுகிறது.

''சிங்கள மொழிப் போராட்டத்தில் உயிர்நீத்த தம்பராவே பிக்குவுக்கு ஞாபகச்சின்னம் எழுப்பு முன்பு அந்த அநீதிச் சட்டத்தை ரத்துச் செய்யக்கூடிய வசதியிருந்தது என்பதை எவரும் ஒப்புக்கொண்டாகவேண்டும். மனச்சாட்சிப்படி பணியாற்றுவதானால் அந்த அநீதிச் சட்டம் உடனடியாக இரத்துசெய்யப்படவேண்டும். தம்பராவே பிக்குவுக்கு ஏற்படுத்தப்படும் சரியான நினைவுச்சின்னம் அதுதான்.'

இவ்வாறு 'தவச' தலையங்கம் கூறுகிறது.

## சுதந்திர தினத்தை ஏன் பகிஷ்கரிக்க வேண்டும்?

சுதந்திர தினத்தை ஏன் தமிழ் பேசும் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்பதை விளக்கி ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை தமிழ் இலங்கை முழுவதும் விநியோகித்துள்ளது:

**யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உண்மைகள் ஒருபோதும் சாவதில்லை— சமஷ்டி அரசியலமைப்பே இந்நாட்டு இனப் பிரச்சினையைத் தீர்த்திடுவதற்குள்ள ஒரே அரசியல் மார்க்கம் என்ற உண்மையை சிங்கள மக்கள் உணர்ந்திடும் காலம் மிக விரைவில் வரத்தான் போகிறது!**

சமஷ்டியாட்சி ஏற்படும்வரை இந்நாட்டில் ஒருபோதுமே அமைதி நிலவாது; நெருக்கடிகளும், இனக் கலவரங்களும் மீண்டும் மீண்டும் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் மோதல்களும் நடந்துகொண்டேயிருக்கும்! இதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

ஒற்றையாட்சி முறையை ஏற்படுத்த கனடா முயன்றால் நாடு பல கூறுகளாகிவிடுமென்று கனடா பிரதமர் கூறியிருப்பது, இந்நாட்டின் புதிய அரசியலமைப்பிலும் மீண்டும் ஒற்றையாட்சி முறையையே கொண்டுவர நினைக்கும் ஆளுங்கட்சியினருக்கு ஓர் எச்சரிக்கையாக அமைய வேண்டும்!

பல இனங்கள் வாழும் நாட்டில் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை காலப்போக்கில் நாட்டைக் கூறுபோடும்!

இணைப்பு ஆட்சி முறை வேற்றுமையில் ஒற்றுமை கண்டு நாட்டின் ஐக்கியத்தை வலுப்படுத்தும்!

தகுந்த தருணத்தில் கனடா பிரதமர் கூறியுள்ள மேற்கண்ட அரசியல் அறிவுரை நமது நாட்டு பெரும்பான்மை இனத்தின் [illegible] ஏறுமா? அல்லது பாலைவனத்தில் [illegible] பயனற்று போகப் போகிறதா?

## சோஸலிசமாம் சோஸலிசம்...!

கணக்குப் பரிசோதனைத் திணைக்களத்தின் 1967-68 ஆம் ஆண்டுக்குரிய தமிழ் ஆண்டு அறிக்கையின் 3,4,5,6, தொகுதிகள் (மொத்தம் நான்கு தொகுதிகள்) மொழி பெயர்ப்பு வேலை முடிந்தும் இன்னும் வெளிவராமல் இருப்பது ஏன்? இவற்றை அப்படியே வெளியிடாது விட்டுவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திட்டமிட்டிருப்பதாக அடிபடும் வதந்தி மெய்யா? அப்படியானால் கணக்குப்பரிசோதனைத் திணைக்களத்தின் தமிழ் மொழி பெயர்ப்புப் பகுதியில் ஒரு சில தமிழ் ஊழியருக்கு அள்ளி வைக்கவும் இத்திணைக்களத்தின் ஆண்டு அறிக்கைகளின் தமிழ் வெளியீடுகளை நிறுத்தவும் அரசாங்கம் முயற்சி செய்கிறதா? இது தான்சோசலிசமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமசமாஜத் தலைவரின் தமிழ்நாட்டு "சர்க்கஸ்"

அன்பு நண்பா,

ஐக்கிய முன்னணியினர் ஆட்சிபீடமேறிய பின்னர், அவர்கள் வேறு ஏது செய்யாவிடினும், இரண்டு விஷயங்களில் அதிக ஈடுபாடு காட்டி வருவதனை நீ கவனித்திருப்பாய்—ஒன்று அரசாங்கச் செலவில் உலகம் சுற்றிடுவது; அடுத்தது தமிழ்ப் பகுதிமீது 'படையெடுத்திடுவது'!

பாலுக்கு வழியில்லை; மிளகாயோ காணக் கிடைப்பதரிது; புளியோ ஆனைவிலை; பருப்புக்குத் தட்டுப்பாடு; இதுபோன்ற அன்ருட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் கிடைப்பது குதிரைக் கொம்பாகிவிட்டது! மக்கள் குமுறிக்கொண்டிருக்கிருர்கள். இதுபற்றிக் கேட்டாலோ, சோசலிச இலட்சியத்தை நோக்கி முன்னேறும்போது இதுபோன்ற துன்பங்களை அனுபவித்திடத்தான் வேண்டும்; அந்நிய செலாவணி இல்லாததால்தான் இத்துணை கஷ்டம்; என்று பல்வேறு சமாதானம் கூறுகின்றனர் அமைச்சர்கள். ஆயினும் அமைச்சர்களோ மாறி மாறி உலகப் பவனி வந்துகொண்ருக்கின்றனர்! அன்ருட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்திட இல்லாத அந்நிய செலாவணி அமைச்சர்கள் அகிலம் சுற்றிட மட்டும் எப்படியோ கிடைத்துவிடுகிறது-கவனித்தனையா?

இப்படி 'உலகம்' சுற்றிவரும் அமைச்சர்கள் தமிழ் இலங்கைக்கு அடிக்கடி 'படையெடுப்பதையும்' இப்பொழுது தங்கள் முக்கிய வேலையாக ஆக்கிக்கொண்டு வருகின்றனர்—ஆமாம் தமிழ்பேசும் மக்களை தாங்கள் வெற்றி கொண்டுவிட்டதுபோன்றதோர் பிரமையை சிங்கள மக்களிடையே ஏற்படுத்திடுவதே அமைச்சர்கள் தமிழ் இலங்கைச் சுற்றுலாவை அடிக்கடி மேற்கொள்ளுவதன் உள்நோக்கம் என்பது உனக்கு நான் சொல்லித்தான் தெரிந்திடவேண்டுமா என்ன?

அமைச்சர்கள் தமிழ் இலங்கைக்கு வரும் போதெல்லாம் அடிமைகள்போல அங்கு சில கங்காணிகள் வரவேற்பளிப்பதும், அமைச்சர்களின் காலை நக்குவதும் மதுப் புட்டிகளும்...... ட்டிகளும் கொடுத்து தமிழ் மக்களின் பரம்பரை மானத்தையே குழிதோண்டிப் புதைத்திடுவதையும், தமிழ்மக்களின் விடுதலை உணர்ச்சியை மழுங்கடித்திட எடுத்திடும் முயற்சிகளையும் கண்டு இரத்தக் கண்ணீர் வடித்திடுபவர்களில் நானும் ஒருவன் என்பதனை அறிவாய் நீ!

## இதயம் பூரித்தேன்

ஆனல் நண்பா, அண்மையில் நடந்த சில சம்பவங்கள் தமிழ் இளைஞர்களின் தன்மானம் அடியோடு மறைநதுவிடவில்லையென்பதையும், விடுதலை ஆர்வம் மழுங்கிவிடவில்லையென்பதையும சிங்கள ஆதிக்கதலைத எதிர்த்துப் போராடிடும்வீர உணர்ச்சிநீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருப்பதையும எடுத்துக் காட்டிவிட்டன. இது கண்டு இதயம் பூரித்தேன்!

ஆம் நண்பா, தமிழ் இலங்கைக்கு சென்ற கிழமை சென்றிருந்த நிதியமைச்சரை 'திரும்பிப்போ' என்ற கோஷம் சாவகச்சேரியில் வரவேற்றதாம்.

யாரும் சொல்லிக் கொடுத்திடவில்லை; எந்த இயக்கமும் நிதியமைச்சர் விஜயத்தை எதிர்த்திடும்படி அறிக்கை விடுக்கவில்லை! இளைஞர்களைத் தூண்டிவிட்டதாக யாரையும் குற்றம் சொல்லவும முடியாது! அப்படியிருந்தும் நிதியமைச்சருக்கு எதிரான கோஷம் எழுந்திருக்கிறது என்ருல் தமிழ் இளைஞர்கள் மத்தியில் சுதந்திர உணர்ச்சி கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்து விட்டது என்றுதான் பொருள்! ஐக்கிய முன்னணி ஆட்சியினர் போர்த்தியுள்ள சோசலிசப் போர்வையில் தமிழ் இளைஞர்கள் மயங்கிவிடவில்லையென்பதுதான் அர்த்தம்—

## எங்கும் எதிரொலிக்கலாம்!

நிதியமைச்சருக்கு எதிராக இம்முறை எழுந்த கோஷம் வலிவு குறைந்ததாக இருந்திருக்கலாம்—ஆனல் ஆளுங்கட்சியினர் ஒன்றை மட்டும் தெரிந்துகொண்டிடவேண்டும்! யாரும் தூண்டாமலே—எந்தப் 'பெரிய' தலையும் தலையிடாமலே—தமிழ் இளைஞர்கள் அரசாங்கத்தின் அக்கிரமப் போக்குக்கு எதிராக அணிதிரண்டுகொண்டிருக்கிருர்கள் என்பதே அந்த உண்மையாகும். இன்று சாவகச்சேரியில் மட்டும் கேட்டகுரல் நாளை பல இடங்களில் வெடிக்கலாம்—தமிழ் இலங்கை முழுவதுமே எதிரொலிக்கலாம்—தமிழ் இலங்கையில் அமைச்சர்கள் காலடி வைத்திடமுடியாத நிலை மீண்டும் தலையெடுத்திடலாம்—யார் கண்டார்கள்?

தமிழரசுக் கட்சியினர்தாம் தமிழ் இளைஞர்களை 'தூண்டி'விட்டு வருகிருர்கள் என்று அமைச்சர்கள் தமிழரசார் மீது வசைமாரி பொழிந்திடுவது வழக்கம். தமிழரசுக் கட்சியினர் தூண்டாமலே— தமிழ் இளைஞர்கள் தாமாகவே எழுச்சியடைந்துவிட்டனர்; இயக்கம் நடத்திடத் துடித்திடுகின்றனர்; என்பதனை சாவகச்சேரி சம்பவம் எடுத்துக்காட்டிவிட்டது!

தமிழரசுக் கட்சியின் இன்றையத் தலைவர்கள் தாம் தமிழ் இளைஞர்களின் அதிதீவிர உணர்ச்சிகளை ஓரளவு கட்டுப்படுத்தி அமைதி வழியில் பிரச்சினைகளை தீர்த்திட முயல்கின்றனர்; தமிழரசுக் கட்சியின் இன்றைய மூத்த தலைவர்களுடன் அரசு சமரசமாகப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறினல் அதனல் நட்டமடையப்போவது சிங்கள ஆட்சியாளர்களே!

ஏனெனில், இன்று அதிதீவிரவாதத்தை விரும்பிடும் தமிழரசுக் கட்சியிலுள்ள இளைஞர்கள் நாளை இயக்கத் தலைவர்களாகும் காலம் வரும்போது—அவர்கள் எத்தகைய முறைகளையும், திட்டங்களையும் பின்பற்றப் போகின்றனரோ யார் கண்டார்கள்?

## எதிர்ப்பு சிங்களவருக்கு எதிரானதா?

"என்னைத் திரும்பிப் போகும்படி சிலர் கோஷமெழுப்பியுள்ளதாக அறிகிறேன். இதே போல தென்னிலங்கைக்கு வரும் தமிழர்களையும் திரும்பிப் போகும்படி கோஷமெழுப்பப்பட்டால் என்ன நடக்கும்? தெற்கில் இப்பகுதியைச் சேர்ந்த ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் வாழ்கிருர்கள் என்பதை இங்கு கோஷமெழுப்பும் சிலர் மறந்துவிடக்கூடாது."

என்று சாவகச்சேரி சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டுப் பேசியிருக்கிருர் டாக்டர் என்.

## அரசியல் மேடை

எம்! பேசியிருக்கிருர் என்பதைவிட தமிழ் மக்களைப்பயமுறுத்தியிருக்கிருர் என்பதே பொருத்தமானதாகும். இதில் இரண்டு விஷயங்களை டாக்டர் என். எம்.மும் மற்றையோரும் புரிந்து கொண்டிடவேண்டும்.

டாக்டர் என். எம். அவர்களைத் திரும்பிப் போகும்படி கோஷம் எழுப்பப்பட்டதென்ருல் அதற்குக் காரணம் டாக்டர் அவர்கள் ஒரு சிங்களவர் என்ற காரணத்தால் அல்ல—சிங்களவர் என்ற காரணத்தால் டாக்டரை திரும்பிப்போ என்று கூறியிருப்பார்கள் என்ருல் வடபகுதியில் இன்று பிழைப்பு நடாத்திவரும் சிங்களவர்கள் அத்தனை பேரையுமல்லவா திரும்பிப் போகும்படி கோஷமெழுப்பப்பட்டிருக்கவேண்டும். அப்படி யாரும் கூறவில்லையே!

தமிழ்பேசும் மக்களை அடிமைப்படுத்தும் சிங்கள ஆதிக்கத்தின் பிரதிநிதியாக— தமிழ்பேசும் மக்களுக்கு அநீதி இழைத்துவரும் அரசாங்கத்தின்ஓர் அங்கமாக டாக்டர் என். எம். விளங்குகிருர் என்ற ஒரே காரணத்துக்காகவே எதிர்ப்புக்குரல் எழுந்ததே தவிர சிங்கள மக்கள் மீது கொண்ட துவேஷத்திஞலல்ல என்பதனை நிதியமைச்சர் புரிந்துகொண்டிடவேண்டும்.

தான் ஒரு சிங்களவர் என்ற காரணத்திஞல்தான் தன்னைத் திரும்பிப் போகும்படி தமிழ் இளைஞர்கள் எதிர்ப்புக்குரல் கொடுத்தனர் என்றதோர் தப்பபிப்பிராயத்தினை டாக்டர் என். எம். அவர்கள் சிங்களவரிடையே ஏற்படுத்த முயன்றிருக்கிருர்! ஆமாம், நண்பா மறைமுகமாக சிங்களவரை உசுப்பிவிட முயன்றிருக்கிருர்!

சிங்களவரான நிதியமைச்சருக்கு எதிராக மட்டுமல்ல-இன்றைய ஒற்றையாட்சிச் சிங்கள ஏகாதிபத்தியத்தின் தமிழ் அமைச்சரான திரு. செல்லையா குமாரசூரியரின் வருகைக்கு எதிராகவும் தமிழ்பகுதியில் கோஷங்கள் எழுப்பப்பட்டன என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டிட வேண்டும்!

அரசாங்கத்துக்கு எதிராக — அரசாங்கம் தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளுக்கு எதிராக-தமிழ் இளைஞர்கள் கொதித்து எழுவதை புரிந்துகொள்ள மறுத்து சிங்கள—தமிழ் இன வாதத்தை மூட்டி விடுதல் டாக்டர் என். எம். போன்ற முதிர்ச்சிபெற்ற சிங்களத் தலைவர்களுக்கு அழகல்லவே!

## என்ன நடக்கும்?

தெ[illegible] தமிழர்கள்— யாழ்ப்பாணத்தவர்கள் வாழ்கிருர்கள்; அவர்களையும் திரும்பிப் போகும்படி சிங்களவர்கள் கோஷமெழுப்பினுல் என்ன நடக்கும் என்று கேட்டிருக்கிருர் என். எம்.

தெற்கில் ஐந்துஇலட்சமல்ல—மலையகத் தமிழர்களையும்சேர்த்து ஏறத்தாழ 20இலட்சம் தமிழ்பேசும் மக்கள் வாழ்கிருர்கள் என்பதனை நாம் மறந்துவிடவில்லை—இந்த 20 இலட்சம் மக்களையும் திரும்பிப் போகும்படி சிங்களவர் கூறினல் என்ன நடக்கும் என்பதற்கு விடை கூறுதல் அத்துணை கஷ்டமானதாகத் தெரியவில்லை நமக்கு.

தென்னிலங்கையில் தமிழர்கள் வாழக் கூடாது என்று சிங்களவர்கள் துரத்துவார்களானல்—அதனல் ஏற்படப்போகும் விளைவு நீங்களும் நாங்களும் விரும்பாத நாட்டுப் பிரிவினை! ஈழம் பிளவுபடாமல் இணைப்பரசின் கீழ் இருந்திட வேண்டுமென்பதுதான் இன்று நாம் விரும்பிடுவது. சிங்களவர்களுக்கு அது இஷ்டமில்லையானல்—நாட்டுப் பிரிவினையைத்தான் சிங்களவர்கள் விரும்புவார்களானல்—நாம் வேண்டாமென்ரு கூறிடப்போகிருேம்?

தென்னிலங்கையில் வாழும் தமிழர்களைக் காட்டி தமிழ் இனத்தின் தேசிய எழுச்சியை—விடுதலை உணர்ச்சியை மழுங்கடிப்பது இனி முடியாத காரியம் என்பதையும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்வோர்களை விட தென்னிலங்கையில் சிங்களவர்களின் தொல்லைகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் தமிழர்கள்தாம், தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் போரில் அதிக ஆர்வம் காட்டி வருகிருர்கள்; தமிழ் பேசும் மக்களுக்கோர் தனித்தாயகம் அமைப்பதில் உறுதியுடனிருந்து வருகிருர்கள் என்பதையும் சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டிட வேண்டும்!

## விடுதலை உணர்ச்சி அழிந்ததா?

1958ம் ஆண்டு தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்களை கொலை செய்து துன்புறுத்தி, தமிழ் பெண்களின் கற்பினைச் சூறையாடி, கொடுமை பல செய்து கப்பலில் ஏற்றி அகதிகளாக தமிழ் இலங்கைக்கு சிங்கள அரசு அனுப்பிவைத்ததே—அதனல் தமிழ் மக்களின் இன விடுதலைக் கோரிக்கையை கைவிடச் செய்ய முடிந்ததா? மாருக, அதன்பின்னரே தமிழ் மக்களின் உள்ளத்தில் மேலும் சுதந்திர வேட்கை உறுதியடைந்தது! விடுதலை இயக்கமாம் தமிழரசுக்கட்சிக்கு ஆதரவு பெருகியது! இதை ஆட்சியாளர்கள் கவனத்திற் கொண்டிட வேண்டும்!

பல இலட்சம் முஸ்லிம்கள் பாரதமெங்கும் சிதறி வாழுகிறர்கள் என்பதற்காக 'பாகிஸ்தான்'கேட்டிட ஜின்னுதயங்கியிருந்தால் இன்று முஸ்லிம்களுக்கு தனி நாடு கிடைத்திருக்குமா? இங்கு நாம கேட்டிடுவது 'பாகிஸ்தான்' கூட அல்ல! அதிகாரப் பிரிவினை; சமஷ்டிக்குட்பட்ட தமிழரசு! எனவே பயமுறுத்தி தமிழினத்தின் உரிமைக்கோரிக்கையை முறியடித்திட முடியாதென்பதை அரசு உணர்ந்திட வேண்டும்! இதில் தப்புக்கணக்குப் போட்டிடின், நட்டம் அவர்களுக்கே தவிர நமக்கல்ல!

## கொழும்பில் ஒன்று; யாழ்ப்பாணத்தில் இன்ஞென்று

'இந்நாட்டின் அடிப்படைப் பிரச்சினையான பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் சகல இன மதப்பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படும்'

என்றும் ஓர் 'பொன்மொழியை' யாழ்ப்பாணத்தில் உதிர்த்துவிட்டிருக்கிருர் டாக்டர் என். எம். இது அவர்களது வழக்கமான 'புலம்பல்' என்பதனை நீ அறியாயே!

ஆனல் நண்பா, இத்தச் சித்தாந்தத்தில் அவர்களுக்கு உண்மையான நம்பிக்கை இருந்திடின், பொருளாதாரப் பிரச்சினையை தீர்த்திடப் புறப்பட்டவர்கள் ஏன் மொழிப் பிரச்சினையில் இப்போது 'சிங்களம் மட்டும்' வாதிகளாக மாறிடவேண்டும்? எதற்காக தமிழுக்கு சம அந்தஸ்து கோரிக்கையை கைவிட்டிருக்க வேண்டும்?

பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்திடின் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படும் என்று யாழ்ப்பாணத்தில் போய் உபதேசித்திருக்கும் டாக்டர் என். எம்., தமிழ் மொழிக்கு நியாயமான அளவு உரிமைகூடத் தரக்கூடாது: தமிழ் சட்டவிதிகளால் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்று இனவெறி, மொழிவெறிக் கோஷமெழுப்பி சூடுபட்டு மாண்ட இரத்னசாராவை,

தேசியத் தலைவா, நியாயம் நீதிக்காகப் போராடியவர்

என்றெல்லாம் பாராட்டிடவேண்டிய அவசியமென்ன? உண்மையான மார்க்சிஸ்டாக அவர் இருந்திடின் இரத்னசாரா நினைவுக்கூட்டத்தில் என்ன கூறியிருக்கவேண்டும்? 'மொழிக்காக இரத்னசார சூடுபட்டிறந்தது வீண்வேலை-

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன ஒதுக்கலில் தென்னுபிரிக்காவையும் தோற்கடித்துவிட்டது இலங்கை அரசு!

## நடந்தது தரப்படுத்தலல்ல; தமிழ் மாணவர் புறக்கணிப்பே!

### பண்டிதர் கா. பொ. இரத்தினம்

இலங்கைப் பல்கலைக் கழகங்களின், பொறியியல், மருத்துவம், பல் மருத்துவம், கமத்தொழில், மிருக வைத்தியம், உயிரியில் விஞ்ஞானம், கட்டக்கலை எனும் துறைகளுக்குச் சென்ற ஆண்டுவரை மாணவர்கள் திறமைக் கேற்ப இனவேறுபாடின்றித் தெரிவு செய்யப் பட்டார்கள்: ஐக்கிய மூன்னணி அரசாங்கம் நிறுவப் படுதற்கு முன் 1970 இல் நடைபெற்ற பல்கலைக்கழகப் பிரவேச பரீட்சையும் (க: பொ: த: உயர்தரப் பரீட்சை) வழக்கம் போலத் தான் நடைபெற்றது: பல்கலைக்கழகப் பிரவேச நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுஞ் செய்யப்படவில்லை: இரவு பகலாகப் பாடு பட்டுப் படித்துப் பரீட்சைக்குத் தோற்றிய தமிழ் மாணவர்கள், வெளியிடப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப வழக்கம் போல் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவோம் என்றே எண்ணிஞர்கள் ஆனுல் இவர்களுக்கு அநீதிக்கு மேல் அநீதியை—கொடுமைக்கு மேல் கொடுமையை—இந்த அரசாங்கம் செய்திருக்கின்றது.

#### ஆசைகள் அழிந்தன

'பெற்ருேர்கள் எங்களை டாக்டர்கள் எஞ்சினியர்களாக ஆகவேண்டுமென்று தவஞ் செய்கிருர்களே: இரண்டு முறை வாய்க்கவில்லையே; கடைசி மூன்ரும் முறையாகுதல் தெரிவு செய்யப்பட வேண்டுமே! இம்முறை தவறிஞல் பெற்ருேரின் ஆசைகளையும் எங்கள் கற்பனைகளையும் நிறைவேற்ற முடியாதே' என்று எண்ணிப் படாத பாடு பட்டுப் படித்த தமிழ் மாணவர்கள் பலர் சிங்கள மாணவர்களிலும் கூடிய புள்ளி எடுத்தார்கள்: ஆனுல் அரசாங்கம் செய்த கொடுமையால் இவர்கள் தெரிவு செய்யப்படவில்லை: இவர்களின் எதிர்காலமே பாழாக்கப்பட்டு விட்டது. இவர்கள் தங்களுக்குச் செய்த கொடுமையைக் கண்டு பொங்கி எழுவது விந்தையா?

#### சிங்கள தீவிரவாதிகள் கூச்சல்

ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிறுவப்பட்டபின் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் துறைக்கு விண்ணப்பித்த மாணவர்களில் திறமை அடிப்படையில் 162 மாணவர்கள் தகுதியானவர்கள் என வெளியிடப்பட்டது இந்த 162 பேரில் 100 பேர் தமிழர், 58 பேர் சிங்களவர் 3 பேர் முஸ்லிம்கள், ஒருவர் பரங்கியர். தமிழ் மாணவர்கள். 100 பேர் என்றவுடன் தமிழ் மாணவர்களுக்கு எதிராகச் சிங்கள தீவிரவாதிகள் பலவகையாகக்கிளர்ச்சிசெய்தனர்: பற்பல கதைகளைக் கட்டிப் பரப்பினர்; தமிழ் மாணவர்களின்விடைத்தாள்களுக்குப் புள்ளியிட்டவர்கள் கூடிய புள்ளிகளை வேண்டுமென்றே கொடுத்தனர், என்று குற்றஞ்சாட்டினர். இந்தத் தீவிரவாதிகள் கிளர்ச்சியை வரவேற்று அரசாங்கம் தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களை மீளப் பரிசீலனை செய்தற்குச் சிங்களப் பெருமக்களைக் கூடுதலாகக் கொண்ட ஒரு குழுவை நியமித்தது: இக்குழு தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களை மீளப் பார்வையிட்டு முன் புள்ளியிட்டவர்கள் முறையாகவே புள்ளியிட்டனர் என்று தீர்ப்பு அளித்தது.

#### தரப்படுத்தல் பிரசாரம்

தீவிர சிங்கள வாதிகளின் கிளர்ச்சியும் தூண்டுதலும் மேலும் வலுத்தன. இன அடிப்படையிலே பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்தால் 'சோசலிசம்' பேசும் அரசாங்கத்தைப் பார்த்து உலகமே சிரிக்கும் எனவே இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் சிங்கள தீவிரவாதிகளைப் பிரீதிப்படுத்துதற்கும் புள்ளிகளைத் தரப்படுத்திய பின் மாணவர்களைத் தெரிவு செய்யப்போவதாகத் திட்டமிட்டுப் பிரசாரஞ் செய்யப் பட்டது; பத்திரிகைகள் இச் செய்தியை எங்கும் பரப்பின.

#### வடிகட்டின வகுப்புவாதம்

எந்த அடிப்படையில் புள்ளிகள் தரப்படுத்தப்பட்டன என்று நான் பாராளுமன்றத்தில் ஒரு கேள்வி கேட்டேன்! கல்வி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் 6-1-71 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த விடையில் இக் கேள்விக்கு மறுமொழி இல்லை. இக் கேள்விக்கு நேர் மறுமொழி பெறுதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்: பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டது பற்றிய எனது கேள்விக்குப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விடையில் (அஞ்சாட்டு தொகுதி 93 எண் 5) 'தரப்படுத்தல் என்ற சொல் ஓரிடத்தில் கூட இடம் பெறவில்லை: புள்ளிகள் தரப்படுத்தப்படவில்லை. 'தரப்படுத்தல்' என்ற பொய்ப் போர்வையில் மாணவர்கள் இன அடிப்படையிலே தான் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சிங்களம் மூலம்விடை எழுதியவர்களுக்கு ஒவ்வொரு பயிற்சித் துறைக்கும் குறைந்த புள்ளிகளும் விதிக்கப்பட்டுள்ளன. தமிழ் மாணவர்களுக்கு எதிராக வேற்றுமை காட்டப்பட்டுள்ளது. 'தரப்படுத்தல்' என்ற போர்வையில் வடிகட்டின வகுப்புவாதச் செயல் நடைபெற்றுளது. இதனைப் பின்வரும் அட்டவணை நன்கு நிறுவுகின்றது. ஒவ்வொரு பயிற்சித் துறைக்கும் தெரிவு செய்யப்படுவதற்குச் சிங்கள மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட குறைந்த புள்ளிகளையும் தமிழ் மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட குறைந்த புள்ளிகளையும் இது காட்டு[illegible]து.

| அட்டவணை | சிங்கள மாணவர்கள் | தமிழ் மாணவர்கள் | தமிழ் மாணவர் கூடப் பெறவேண்டிய புள்ளி |
|---|---|---|---|
| 1. பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் | 227 | 250 | 23. |
| 2. கட்டுமத்தைப் பொறியியல் | 212 | 232 | 21. |
| 3. பௌதிக விஞ்ஞானம் | 183 | 204 | 21. |
| 4. கட்டடக்கலை | 180 | 194 | 14. |
| 5. மருத்துவம் பல், மருத்துவம் | 229 | 250 | 21. |
| 6. கமத்தொழில், மிருகமருத்துவம், உயிரியல், விஞ்ஞானம். | 175 | 184 | 9. |

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் துறைக்குத் தெரிவு செய்யப்படுவதற்குச் சிங்கள மாணவர்களிலும் பார்க்கத் தமிழ் மாணவர்கள் 23 புள்ளிகள் கூடப் பெறவேண்டும்.

கட்டுப்பத்தைப் பொறியியல் துறைக்குத் தெரிவு செய்யப்படுவதற்குச் சிங்கள மாணவர்களிலும் பார்ககத் தமிழ் மாணவர்கள் 21 புள்ளிகள் கூடப் பெறவேண்டும்.

பௌதிக விஞ்ஞானத் துறைக்கு தெரிவு செய்யப்படுவதற்குச் சிங்கள மாணவர்களிலும் பார்க்கத் தமிழ் மாணவர்கள் 21 புள்ளிகள் கூடப் பெற வேண்டும்.

கட்டடக்கலைத் துறைக்குத் தெரிவு செய்யப்படுவதற்குச் சிங்கள மாணவர்களிலும் பார்க்கத் தமிழ் மாணவர்கள் 14 புள்ளிகள் கூடப்பெற வேண்டும்.

மருத்துவம், பல்மருத்துவம் எனும் துறைகளுக்குத் தெரிவு செய்யப்படுவதற்குச் சிங்கள மாணவர்களிலும் பார்க்கத் தமிழ் தமிழ் மாணவர்கள் 21 புள்ளிகள் கூடப் பெறவேண்டும்.

கமத்தொழில், மிருகமருத்துவம் உயிரியல் விஞ்ஞானம் எனும் துறைகளுக்குத்தெரிவு செய்யப்படுவதற்குச் சிங்கள மாணவர்களிலும் பார்க்கத் தமிழ்மாணவர்கள் 9 புள்ளிகள் கூடப்பெறவேண்டும்.

#### அநீதி! மாபெரும் அநீதி!!

கல்வி அமைச்சு வெளியிட்ட அறிக்கை கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதற்கே இந்தவேறுபாடு புகுத்தப்பட்டதென்று கூறுகின்றது. சிங்கள மூலமும் தமிழ் மூலமும் ஆங்கில மூலமும் விடை எழுதிய மாணவர்கள் படித்த கல்வி நிலையங்களில் எவை வசதிமிக்க நகரப் பாடசாலைகள் எனவும் எவை வசதி குறைந்த கிராமப்பாடசாலைகள் எனவும் தரப்படுத்தி வசதி குறைந்தபாடசாலை மாணவர்களுக்கு விசேட புள்ளிச் சலுகை கொடுத்திருந்தால் அதனை ஓரளவுக்கு நியாயமான செயல் எனக் கூறலாம். இவ்வாறுசெய்யாமல் கொழும்பு ரோயல் கல்லூரி, கொழும்பு அர்ச்ஜேசேப் கல்லூரி, கொழும்பு அக்குவைனுஸ் பல்கலைக்கழகக் கல்லூரி. கொழும்பு பரிசுத்த குடும்பமடப்பாடசாலை, கல்கிசை—கொழும்பு விசாக வித்தியாலயம், கல்கிசை அர்ச்தோமஸ் கல்லூரி, கண்டி திறினிற்றிக் கல்லூரி, காலி மகிந்தாக் கல்லூரி போன்றவற்றையும் கிராமப் பாடசாலைகளாகக் கொண்டு இவற்றிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய சிங்கள மாணவர்களுக்குக் குறைந்த புள்ளி போதுமென விதித்தது அநீதியேயாகும்:

அன்றியும் ரோயல் கல்லூரி அக்குவைனுஸ் பல்கலைக்கழகம், கொழும்பு பரிசுத்த குடும்ப மடப்பாடசாலை, கல்கிசை அர்ச்தோமஸ் கல்லூரி, கண்டி திறினிற்றிக் கல்லூரி முதலிய பல கல்லூரிகளிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய சிங்கள மாணவர்களுக்குக் குறைந்த புள்ளியும் இவற்றிலே ஒன்ருகப் படித்துப் பரீட்சைக்குத் தோற்றியதமிழ் மாணவர்களுக்குக் கூடிய புள்ளியும் வேண்டும் என விதித்தது மாபெரும் அநீதியாகும்.

தென் ஆபிரிக்காவையும் வென்று விட்டது.

கொழும்பு ரோயல் கல்லூரி, கொழும்பு விசாகக் கல்லூரி கண்டி திறினிற்றிக் கல்லூரி முதலியவற்றிலே படித்த சிங்கள மாணவர்களிலும் பார்க்கப் புத்தூர் சோமஸ்கந்த வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் என்பவற்றில் படித்த தமிழ் மாணவர்களுக்குக் கூடிய புள்ளி வேண்டுமென விதித்தது மாபெரும் துரோகச் செயலாகும்: இதுதான் ஐக்கிய முன்னணியின் நவீன சோசலிசமா? தென் ஆபிரிக்காவிற் கூட இத்தகைய இனத்துவேஷத்தையும் வர்க்க பேதத்தையும் காண்முடியாதே!

#### ஆங்கிலத்துக்குத் தனிச்சலுகை

6-1-71 இல் பாராளுமன்றத்தில் சமர்ம்பிக்கப்பட்ட மறுமொழியில் ஆங்கிலம் மூலம் பரீட்சை எடுத்தவர்களில் எத்தனைபுள்ளிகளுக்கு மேல் எடுத்தவர்கள் இப் பயிற்சித் துறைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள் என்பது குறிப்பிடப்படவில்லை. ஆங்கில மூலம் படித்தவர்கள் வசதியும் வாய்ப்புமுள்ள ரோயல், அக்குவைனுஸ் போன்ற கல்லூரிகளிலேயே படித்தவர்கள். இவர்களுக்கும் தமிழ் மூலம் பரீட்சை எடுத்தவர்களிலும் குறைந்த புள்ளிகளே விதிக்கப்பட்டிருந்தால் இந்த அரசாங்கம் அநீதியின் உச்சியை அடைந்த சிறப்பையும் வசதியான வர்க்கத்துக்குச் சலுகை கொடுத்ததனிப் பெருமையையும் பெற்றுவிடும்.

மருத்துவத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட 52 பேரில் ஆங்கிலம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் 62 பேர்: பல்மருத்துவ துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட 42 பேரில் ஆங்கிலம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் 12 பேர். பேராதனைப் பொறியியல் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட 151 பேரில் ஆங்கிலம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் 11 பேர்: கட்டுப்பதிதைப் பொறியியல் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட 116 பேரில் ஆங்கில மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் 12 பேர்.

#### ''சாம்பார் சோசலிசம்'

பாடசாலைகளிலிருந்து பரீட்சை எடுக்காமல் தனிப் பரீட்சை எடுத்தவர்களும் பட்டபலர் உளர். மருத்துவத் துறைக்குச் சிங்கள மூலம் 15 பேரும், தமிழ்மூலம் 7பேரும், ஆங்கிலம் மூலம் 19 பேரும் தெரிவு செய்யப்பட்டுளர். இவர்களிலும் சிங்கள மூலம் பரீட்சை எடுத்தவர்களுக்கு குறைந்த புள்ளியும் தமிழ் மூலம் பரீட்சை எடுத்தவர்களுக்குக் கூடிய புள்ளியும் விதிக்கப்பட்டது. ஆங்கிலம் மூலம் பரீட்சை எடுத்தவர்களைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை, ஓரினத்துக்கு ஒரு நீதிதாளு மூன்று கட்சிகளின் 'சாம்பார்' சோசலிசம்;

பல்கலைக்கழகத் தெரிவு பற்றி மறுமொழி தருமாறு நான் பாராளுமன்றத்துக்கு மீண்டும் எட்டுக் கேள்விகளை அனுப்பியிருக்கின்றேன். இவற்றுக்கு மறு மொழி, தரப்பட்டவுடன் மீண்டுப் பல மர்மங்கள் வெளிப்படுத்தப்படும்.

#### 'மார்க்ஸ்' தத்துவம் இதுதானு?

'பொதுவுடைமைத் தோழர் வ; பொன்னம்பலம் அவர்கள் மேடைகளில் நீண்டகாலமாக மார்க்ஸ் தத்துவம் (மார்க்ஸிஸம்) பற்றிப் பேசிவருகிருர். நான் வி; பொன்னம்பலத்திடம் ஒன்று கேட்பேன்; தோழரே-இலங்கைப் பல்கலைக் கழகத்தில் நுழைவதானுல் பரீட்சையில் சிங்கள மாணவன் 240 மார்க்ஸ் எடுக்க வேண்டும். தமிழ் மாணவனே 257 மார்க்ஸ் எடுக்க வேண்டும் என்கிறீர்களே - இது தானு உங்கள் மார்க்ஸ் தத்துவம்! இதுதானு மார்க்சிசம்?

காசி ஆனந்தன்,
(யாழ்ப்பாணம் தமிழ் விழாவில் உரையாற்றியது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப்பாருங்கள்?

திருவாளர் குயுக்தி !!!

செ. நாகலிங்கம்,
தொண்டமானாறு.

கே: கலாநிதி பத்மநாதன் அவர்களால் எழுதப்பட்ட வன்னியர் என்ற நூலை எங்கே வாங்கலாம்!

ப: யாழ்ப்பாணம் கலைவாணி புத்தக நிலையத்தில்!

கே: அதே ஆசிரியர் எழுதிய யாழ்ப்பாண அரசு பற்றிய நூலின் பெயர் என்ன! அதை எங்கே வாங்கலாம்?

ப: அந்த அருமையான வரலாற்று ஆராய்ச்சிக் கட்டுரை இன்னும் நூல்வடிவம் பெற்றதாக தெரியவில்லை!

ஃ

சு. இராமலிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே: பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புதிய தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: தமிழனுக்கு தமிழுணர்ச்சி கூடாது என்று கூறும் மரமண்டைகள் சிலர் கலாநிதிகளாக உலவும் இந்நாட்டில் தமிழுணர்ச்சியின் வடிவமாக விளங்குபவர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள். ஈழத்தின் தலைசிறந்த தமிழறிஞரான அன்னூர் பல்கலைக் கழகத் தமிழ் பீடத்தை அலங்கரிப்பது தமிழுக்கு நல்ல காலமே. அவரது காலத்தில் தமிழ் ஏற்றம்பெறும் என்று எதிர்பார்ப்போம்!

ஃ

எஸ். என். ஆர்,
ஏருவூர்.

கே: அமைச்சர்கள் உலகம் சுற்றுவதற்கென ஒரு நிதி ஆரம்பித்தால் 'சோசலிச' அரசாங்கம் மேலும் புகழ் பெறும் என்று நினைக்கிறேன் உங்கள் கருத்தென்ன?

ப: நீங்கள் கூறுவதுபோல தனி நிதி ஆரம்பிக்காமலே 'உலகம் சுற்றுவதில்' நமது மந்திரிகள் புகழ் பெற்றுவிட்டார்களே!!

கே: மும்மூர்த்திகளுக்கு 'குரு'வின் பார்வை மீண்டும் கிடைக்குமா?

ப: 'குரு'வின் பார்வை பற்றி மும்மூர்த்திகள் பொருட்படுத்துவதாக இல்லை. 'குருவை' எதிர்க்கவும் அதுகள் தயாராம்!

ஃ

ஸ்ரீ கணநாதன்,
அளவெட்டி.

கே: சிங்களத்தை வடகிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற மொழியாகப் புகுத்துமுன்னர் ஆங்கிலத்தையகற்றி தமிழை நீதிமன்ற மொழியாக்கும்படி போராடினால் நல்லதல்லவா?

ப: நல்லது மட்டுமல்ல—அவசர அவசியமானதுகூட!

ஃ

செல்லையா,
கொழும்பு—2

கே: இலங்கை மக்கள் எதில் முன்னேறியிருக்கிறார்கள்?

ப: கொலை செய்வதில்...! 22 நாட்களில் 62 கொலைகளைச் செய்து மகத்தான சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்கள்!

கே: சினிமா சங்கம் என்றொரு சங்கத்தை பல்கலைக்கழக மாணவ மாணவிகள் ஏற்படுத்தியுள்ளனராமே!

ப: ஆமாம், சினிமாப் படங்களில் வருவதுபோல அவர்களும் அடிக்கடி 'ஒத்திகை' பார்த்துக் கொள்ள வேண்டாமா?

கே: 'இந்து நேசன்' இப்போது இலங்கைக்கு வருவதில்லையா?

ப: அது வராவிட்டாலென்ன—மித்திரனும் தினகரன் கடைசிப்பக்கமும், 'வீக் என்ட்'டும் இருக்கும் போது!

கே: இருவாரத்துக்கு மந்திரிகள் வயல் வேலைசெய்யப் போகிறார்களாமே... அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: வயல்கள் செய்தபாவம் என்றுநினைக்கிறேன். அமைச்சர்கள் வயலில் இறங்க வேண்டாம்; அகிலம் சுற்றி அரசாங்கப்பணத்தை விரயம் செய்யாது; அவர்களது அலுவலகக் கடமைகளை ஒழுங்காகப் பார்த்தால் அதுவே போதுமே!

ஃ

க. குகச்சந்திரன்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழ் நாட்டின் அடுத்த ஆட்சி பீடம் காமராஜருக்கா கருணாநிதிக்கா கிடைக்கும்?

ப: கலைஞரே மீண்டும் முதல்வர் ஆவார்!

கே: வ. நவரத்தினத்தை மீண்டும் தமிழரசுக் கட்சியில் சேரச் சொன்னால் சேருவாரா?

ப: யார் சேரச் சொல்வது?

---

## தேசியகீதம் எது?

அண்மையில் வெளியான சுதந்திரன் பொங்கல் மலரில் குயுக்தியாரில் முதலாவது கேள்விக்கு கொடுக்கப்பட்ட விடையின் காரணமாக இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியகீதமாக "ஈழத் தமிழ் நாடு" என்னும் தொடக்கத்தையுடைய பாடல்தான் பாடப்பட்டு வருகிறது. பனை கொடைத் தடுப்புக்காவல் முகாமில் வைத்து அறப்போரணித் தலைவர் திரு. ஆர். டப்ளியு. வி. அரியநாயகம் அவர்கள் இப்பாடலை இயற்றினார் என்று சொல்லப்படுகிறது. மன்னார், கல்முனை உடுவில் மாநாடுகளிலும் தமிழரசுக் கட்சியின் பெரும்பாலான பொதுக் கூட்டங்களிலும் மலைநாட்டுக் கூட்டங்களிலும் இப்பாடலே தேசியகீதமெனப் பாடப்பட்டு வருவதை நீங்களும் அறிவீர்கள்.

திரு. சிவநாயகம் அவர்கள் சுதந்திரன் ஆசிரியராயிருந்தபோது 1956ம் ஆண்டுக்கு முன் பரமஹம்ச தாசர் பாடிய தேசியகீதம் என்று ஒரு பாடல் சுதந்திரனில் வெளிவந்த ஞாபகம் இருக்கிறது. ஆனால் அப்பாடல் தமிழரசுக் கட்சியின் எந்த மாநாட்டிலோ கூட்டங்களிலோ பாடப்பட்டதாக அறியமுடியவில்லை. அப்பாடல் வழக்கழிந்ததாக மாத்திரமல்ல வழக்கத்துக்கு வந்ததாகக் கூடச் சொல்ல முடியாது.

1960ம் ஆண்டளவில் "ஈழத் தமிழ் நாடு" என்னும் பாடல் தமிழரசுக் கட்சியின் தேசியகீதமாக சுதந்திரன் மூலம் பிரகடனப் படுத்தப்பட்டதாக எனக்கு ஒரு ஞபகம் உண்டு. எப்படிப் பார்த்தாலும் "ஈழத் தமிழ் நாடு" என்னும் பாடல் தான் பலவருடங்களாகத் தமிழரசுக் கட்சியின் தேசியகீதமாகப் பாடப்பட்டு வருகிறது என்பதும் வேறு கீதம் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை என்பதும் நன்கு புலனாகிறது.

நிலைமை இப்படியிருக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய கீதத்தைப் பாடியவர் யார் என்ற கேள்விக்கு பொங்கல் மலர் சுதந்திரனில் குயுக்தியார் பரமகம்சதாசர் என்று பதிலிறுத்தது சரியாகுமா?

—சி. வை. அரசரத்தினம்
திருக்கோயில்.

ஆசிரியக் குயுக்தியாரின் பதிலின்படி பரமஹம்சதாசன் இயற்றிய

---

# இன்று 23வது தினம்

தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்கின்றனர் தமிழரசார்.

அரசு அப்படிச் செய்யவில்லையென்கின்றனர் தோழர் வ. பொ. வும் திடீர் அமைச்சர் செல்லையா குமாரசூரியரும்.

'இதுபற்றி பகிரங்கமாக விவாதிக்க முன் வாருங்கள்; அநியாயம் நடந்ததை ஆதார பூர்வமாக நிரூபிக்கிறேன்' என்றார் அடலேறு ஆலாலசுந்தரம்...

அழைப்பு விடப்பட்டு 23 நாட்களாகிவிட்டன.

இன்று வரை இது சம்பந்தமாக வ. பொ. விடமிருந்தோ திடீர் அமைச்சரிடமிருந்தோ எவ்வித பதிலுமே வரவில்லை!

---

## சோசலிசமாம் சோசலிசம்..!

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 2ந்திகதி வெளியான பாராளுமன்ற நடவடிக்கைப் புத்தகத் தொகுதியின் 92ம் இலக்க 11ம் அனுபந்தத்தில் வெளியிடப் பட்டுள்ளபதில் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மட்டுமே பிரசுரமாகியுள்ளது. தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இப்படித் தமிழை ஒதுக்குவதுதான் சோசலிசமா?

---

# வாசகர் நறுக்கு

'வாழ்க ஈழத் தமிழகம்' எனும் பாடல்ஒரு காலத்தில் தேசிய கீதமாக இருந்ததை தாங்களே ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். அறப்போரணித் தலைவர் அரியநாயகம் அவர்களின் 'எங்கள்ஈழத் தமிழ்நாடு' பாடலும் தமிழரசு மாநாடுகளில் பாடப்படுவதை நானறிவேன். ஒரு விடுதலை இயக்கத்துக்கு எழுச்சியூட்டத்தக்க பல்வேறு பாடல்களும் பாடப்படலாம். அதில் தவறில்லை; ஆனால் இதுதான் தேசிய கீதம் என்று குறிப்பிட்ட ஒரு பாடல் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. இதற்குப் பதிலளிக்கும் பொறுப்பை தமிழரசுப்பொதுச் செயலாளரிடம் ஒப்படைத்து விடுகிறேன்.

—ஆசிரியர்—

ஃ

## உணர்ச்சிமிக்க அரசியல் மடல்

சுதந்திரன் முன்பை விட இப்போது நன்றாகவும் உணர்ச்சிகரமாகவும் வெளிவருவதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். தங்கள் ஆசிரியத் தலையங்கம் சிறப்பாகவும் துடிப்பாகவும் இருக்கக் காண்கின்றேன். தங்களின் அரசியல் மடலில் தாங்கள் கையாளும் விறுவிறுப்பான எழுதும் நடைக்கு சோர்ந்துபோய்க் கிடக்கும் இன்றையஈழத் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத் தாகத்தை மேலும் வளரச்செய்யும் ஆற்றல்உள்ளன.

—யா. சி. பொன்னையா
திருமலை

ஃ

## மலைநாட்டு மங்கையர் பாராட்டு!

19-1-71ல் வெளியான சுதந்திரன் இதழைப் படித்தேன். அதில் வெளிவந்திருந்த ஆசிரியத் தலையங்கத்தைக் கூர்ந்து படித்தேன். அக்கருத்துக்களையே யானும் தினசரிகளுக்கு எழுதலாம் என்று ஆர்வம் இருந்தது. ஆனால் அப்படியே நான் எழுதினாலும் ஆளும் கட்சிக்கு வால்பிடிக்கும் தமிழ் தினசரிகள் பிரசுரிக்க மாட்டா என்ற சந்தேகத்தால் எழுதவில்லை. எனவே அருமையான ஆர்வக்கருத்துக்களும் விளக்கங்களும் நிறைந்த தங்களின் தலையங்கத்துக்கு எனது மனப்பூர்வமான நன்றி.

—சிவபாக்கியம் குமாரவேல்,
தலைவி; மலைநாட்டு தமிழ் மங்கையர் கழகம்.

ஃ

## ஆசிரியர் வாழ்க !

மத வெறிபிடித்த மாற்றானின் கோரப் பிடியிலிருந்து ஈழத் தமிழினத்தைக் காப்பதற்காகப்போராடும் உங்கள் போன்ற ஒரு சிலரை ஈழத் தமிழனம் பெற்ற செல்வங்கள் என்றே கூறவேண்டும். சிறை சென்றாலும் மனம் தளராமல் இலட்சியப்பாதையை நோக்கி வீறுநடை போடும் தங்களுக்கு வாழ்த்துக்கூறாமல் இருக்கமுடியவில்லை. தொடரட்டும் உங்கள் சேவை, செழிக்கட்டும் ஈழத் தமிழினம், ஓங்கட்டும் அதன் புகழ்.

—வே. சதாசிவம்
உடப்பு

தாங்கள் தமிழுக்கு செய்து வரும் தொண்டு அளப்பரியது. சுதந்திரன் ஆசிரியராகிய உங்களது பேனவே தமிழ் இளைஞர்களுக்கு சுதந்திர உணர்வையூட்டுகின்றன. ஈழத் தமிழர் விடுதலைக்காக அயராதுழைக்கிறீர்கள் பல்லாண்டு நீங்கள் வாழ்ந்து பணியாற்ற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

—இ. சுந்தரலிங்கம்.
செங்கலடி.

ஃ

இலங்கையில் எத்தனையோ பத்திரிகைகள் இருந்தும் அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் கைது செய்யப்படவில்லை. ஆனால் சுதந்திரன் பத்திரிகை ஊட்டும் வீர உணர்ச்சி அரசாங்கத்தைப் பயமுறுத்துகிறது. இதனால் தான் இவர்கள் சுதந்திரன் ஆசிரியரைக் கைது செய்திருக்கிறார்கள். சுதந்திரன் ஆசிரியர் மட்டுமல்ல மேலும் ஆயிரக்கணக்கானோர் சிறை செல்ல நேரிடினும் சுதந்திரன் ஊட்டிவரும் விடுதலை வேட்கையை ஒழித்துவிட முடியாது.

சு. குருநாதபிள்ளை,
விநாயகபுரம்,
திருக்கோவில்.

ஃ

## பரம்பரை வாசகன்!

நான் ஒரு சுதந்திரன் பரம்பரை வாசகன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகின்றேன்.

சுதந்திரனை படிப்பதால் தான் ஒரு சில சுய இச்சைக்காரர்களின் போலி வேஷங்களை புரிந்து கொள்ள முடிகின்றது.

எங்கள் ஊரில் சுதந்திரன் விநியோகம் இல்லை என்றாலும் தமிழ் தாகம் தமிழ் உணர்ச்சி மிக்க தமிழ் பெரியார்கள் இருக்கிறார்கள். அண்ணாவின் அறிவுரைகளைப் படிக்கும் தம்பிமார்கள் இருக்கின்றார்கள். தமிழைப் படிக்கின்றோம். தமிழே உயிராக வாழ்கின்றோம்.

இலங்கையில் தன்மான மிக்க தமிழர் நலன் கருதி வெளிவரும் தமிழ் வார ஏடான சுதந்திரனை வெளியூர்களில் இருந்து வாங்கி வந்து எங்கள் ஊர் பொது மக்களிடம் காட்டி ஒரு சில பசுத்தோல் போர்த்த புலிகளின் போலிவேஷங்களை கலைத்து வருகின்றேன்.

வாழ்க சுதந்திரன்! வளர்க அதன் சேவை!

பாலூர் பாரதி.
பாலமுனை.

---

## சோசலிசமாம் சோசலிசம்..!

தனிச் சிங்களச் சட்டத்தைத் தீவிரமாக நாடு முழுவதும் நடைமுறைப் படுத்த அரசு திட்டமிட்டுள்ளதாம். இதற்கான விதிகள் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறதாம். சிங்கள சட்ட விதிகள் கொண்டு வரப்படும்போது 1966-ம் ஆண்டு தமிழ்மொழிச் சட்ட விதிகள் செயலிழந்து போகுமாம்! வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்கும் தமிழ் மொழிச் சட்ட விதிகளை அகற்றுவதுதான் இன்றைய அரசின் சோசலிசமாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கைதி ஆனது ஏன்?

**கோவை-மகேசன்**

**நான்** கைதுசெய்யப்பட்டதற்கான காரணங்களைப்பற்றி சொல்லுவதற்கு முன் 1970 வைகாசிப் பொதுத்தேர்தலுக்குப் பின் இந்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தையடுத்து இந்நாட்டுப் பத்திரிகைகள் பின்பற்றிவரும் கோழைத்தனமான போக்குப் பற்றியும் சுதந்திரன் மட்டும் எதற்கும் கலங்காமல், வளைந்துகொடுக்காமல் — ஆட்சியாளரின் அநீதியான நடவடிக்கைகளை எதிர்த்து குரல் கொடுத்து வருவது பற்றியும் இங்கு சிறிது கூறிவைக்கவேண்டியது எனது கடமையாகிறது. ஏனெனில் நான் கைதுசெய்யப்பட்டதற்கான மறைமுக காரணம் இதனோடு பின்னிப் பிணைந்து கிடக்கிறது.

எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும்—அது எவ்வளவு பலமுள்ளதாக அதிகாரபீடத்திலமர்ந்திருந்தாலும்— கொஞ்சம்கூட அச்சமின்றி—தயவு தாட்சண்யமின்றி — அந்த அரசாங்கம் விடும் தவறுகளை இடித்துக் காட்டி எதிர்ப்புக்குரல் கொடுத்து மக்களின் உரிமைகளைக் காத்து நிற்கக் கூடியவனே ஓர் உண்மையான பத்திரிகையாளனாக இருக்கத் தகுதிபடைத்தவன். இத்தகைய பத்திரிகைகள்தாம் ஒரு சனநாயக நாட்டில் மக்களுக்கு உண்மையான தொண்டாற்றிட முடியும்.

அதை விடுத்து, இந்தத் தேர்தலில் ஒரு கட்சி ஆட்சி பீடமேறினால் அதன் நடவடிக்கைகள் யாவற்றுக்கும்-அது மக்களுக்கு தீமைபயப்பதாக இருந்தாலும்கூட— ஆதரவு தெரிவிப்பதும்; அடுத்த தேர்தலில் இன்னோர் கட்சி—முன்பு ஆண்ட கட்சிக்கு நேர்முரணான கொள்கைகள் கொண்ட கட்சி— ஆட்சிச் சக்கரத்தைக் கையேற்பின் அக்கட்சி செய்வதற்கெல்லாம் தாளம்போடுவதும் ஒரு நல்ல பத்திரிகைக்கும், பத்திரிகை ஆசிரியருக்கும் ஏற்புடைத்தல்ல.

மக்களுக்காக— மக்களின் உரிமைகளுக்காக சிறிதுகூட விட்டுக் கொடுக்காது—தனக்கு அதனால் வரும் தொல்லைகளையும் துன்பங்களையும் தாங்கிக்கொண்டு— வாதாடுபவனே ஒரு நேர்மையான பத்திரிகைக்காரனாக இருக்கமுடியும். குழைவது; நெளிவது; கும்பிடு போடுவது; போன்ற செயல்களில் மனச்சாட்சியை விற்காத ஒரு பத்திரிகை ஆசிரியர் ஒருபோதும் ஈடுபடமாட்டார்.

நேர்மையாகவும் மக்களுக்கு விசுவாசமாகவும்—மனச்சாட்சிக்கு விரோதமின்றியும் பணியாற்றுவதற்கு ஒரு பத்திரிகை ஸ்தாபனம் இடம்தர மறுப்பின், ஓர் உண்மையான பத்திரிகைக்காரன், தனது ஆசிரியர் பதவியை தூக்கியெறிந்துவிட்டு வெளியேறுவதற்கு தயாராவானேதவிர 'வயிற்றுப் பிழைப்புக்காக' தனது மனச்சாட்சியையும் எழுத்தாற்றலையும் விலைகூறி விற்றிட முன்வரமாட்டான்.

தனது மனச்சாட்சிக்கு விரோதமாக—வெறும் 'வயிற்றுப் பிழைப்புக்காக' சம்பளம் போடும் முதலாளி சொல்வதையெல்லாம் அப்படியேயெழுதிக்கொண்டிருக்கும் பத்திரிகைக்காரனால் நாட்டுக்கு தீமை விளையுமே தவிர நன்மை விளைய முடியாது.

பத்திரிகைத் தொழிலுக்கும் ஏனைய தொழில்களுக்கும் வித்தியாசம் நிரம்ப உண்டு. பத்திரிகை நடத்துவது வெறும் 'தொழில்' மட்டுமல்ல; இன்னும் சொல்லப்போனால் அதை ஒரு தொழில் என்று நினைப்பதே தப்பு என்று கருதுபவன் நான் பத்திரிகை நடத்துவது உண்மையில் ஓர் மக்கள் பணியாகும். மக்களை இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு கொண்டு வரவேண்டியது ஒரு பத்திரிகைக்காரனின் கடமையாகும்.

மக்களின் விருப்பங்களைப் பிரதிபலிப்பது ஒரு பத்திரிகைக்காரனின் கடமையென்பதில் துளியும் ஐயமில்லை. ஆனால் இதில் எனக்கு ஒரு சிறு மாறுபட்ட கருத்து இருக்கிறது. மக்கள் விருப்பங்களைப் பிரதிபலிப்பதிலும் ஒரு வரையறை; ஒருமுறை இருக்கவேண்டும்.

உதாரணமாக சிறு குழந்தையொன்று அறியாத்தனத்தால், நச்சுவில்லையொன்றை இனிப்பென்று கருதி சுவைத்திட விரும்பினால், அதை நாம் அனுமதிப்போமா? அதுபோல மக்கள் சிலவேளைகளில் தவறான ரசனையை விரும்பவும் கூடும். உதாரணத்துக்கு ஆபாசச் செய்திகளை — இனக்கவர்ச்சி 'போஸ்'களை விரும்பக்கூடும். ஆனால் மக்கள் விரும்புகிறார்களே என்ற காரணத்துக்காக அத்தகைய செய்திகளையும் கட்டுரைகளையும், படங்களையும் அம்மணமாகப் பிரசுரித்திடுவது சமுதாயத்துக்கு நஞ்சூட்டுவது போன்ற செயலாகும்.

மக்களை நல்ல ரசனையுள்ளவர்களாக மாற்றியமைக்க வேண்டியது ஒரு பத்திரிகைக்காரனின் கடமையே தவிர மக்கள் விரும்பும் ரசனையைத் தருகிறோம் என்று கூறிக்கொண்டு சமுதாயத்தை நாசப்படுத்துவது ஆகாது என்பதிலே உறுதியான நம்பிக்கை கொண்டவன் நான்.

இப்படி பத்திரிகைகளும், பத்திரிகைக்காரர்களும் கடைப்பிடித்திட வேண்டிய கற்பு நெறிகள் பல விருக்கின்றன. இந்த நெறிகளை ஈழத்துப் பத்திரிகையாளர்கள் அண்மைக்காலமாக கைநழுவ விட்டு வருவதை வருத்தத்துடன் அவதானித்துவருகிறேன்.

1970 பொதுத் தேர்தல் முடிந்தபின் சர்வாதிகாரப் பெரும்பான்மையுடன் ஐக்கிய முன்னணி அரசு கட்டில் ஏறியதால் ஏற்பட்ட அச்சத்தில் இந்நாட்டுப் பத்திரிகைகள் சில உடனே தம் பச்சோந்தித் தனத்தை காட்டத்தொடங்கிவிட்டன; ஆளுங்கட்சியின் காலைப் பிடிக்க ஆரம்பித்துவிட்டன.

ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்திடின், 1958ம் ஆண்டில் நடந்தது போலத் தமிழர்கள் கப்பலில் அகதிகளாகப் போக நேரிடும் என்று படங்கள் போட்டு தேர்தலுக்கு முன்பு பிரசாரம் செய்த ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகை, ஐ. மு. ஆட்சிக்கு வந்த மறுநாளே தனது பச்சை நிறத்தை நீலம் சிவப்பாகமாற்றியது. அன்று தொட்டு இன்றுவரை ஐ. மு. அரசாங்கத்தின் குறிப்பிட்ட அமைச்சர் ஒருவரது காலை நாளாந்தம் நக்குவதும் தமிழ் மக்கள் மத்தியில் ஐக்கிய முன்னணி பற்றி பிரசாரம் நடத்துவதிலுமே ஈடுபட்டு வருகிறது!

மற்றோர் தமிழ்த் தினசரியின் ஆசிரியர், சிங்கள முதலாளிகள் விருப்பப்படி தமிழினத்தையே இந்நாட்டிலிருந்து முற்றாக அழித்தொழிப்பதற்கு திட்டமிட்டு 'கோயபல்ஸ்' பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார். ஆமாம்—வயிற்றைக் கழுவுதற்காக சொந்த இனத்தையே அழித்திட துணைபோகின்றார்!

இரு தமிழ்த் தினசரிகள் தாம் ஓரளவு தமிழ்மக்களின் உணர்ச்சிகளை அப்போதைக்கப்போது — போதிய வலிவுடன் இல்லாவிடினும்—எடுத்துக்காட்டி வருகின்றன.

ஐக்கிய முன்னணி ஆட்சி பீடமேறியவுடனேயே, இந்நாட்டு சிங்கள நீதியமைச்சர் ஈழத் தமிழினத்தை வந்தேறு குடிகளென்று நாத்துடுக்காக இகழ்ந்தார். அதைக் கண்டித்திட இந்நாட்டு 'தேசிய ஏடுகளுக்கு' முதுகெலும்பு இருக்கவில்லை. சுதந்திரனே முன்னின்று அமைச்சரின் கூற்றை வலிவுடன் எதிர்த்தது. அமைச்சர் தமிழ் மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் என்றும் குரலெழுப்பியது!

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் தமிழ் மக்கள் நிறைந்திருந்த கூட்டமொன்றிலே — 'ஈழத்தில் தமிழினம் என ஒன்றில்லை—அது ஒரு கலப்புச் சாதி' என்று கூறி தமிழினத்தைப் பழித்துரைத்தார்! இதைக்கேட்டபின்னும் கூட இந்நாட்டுப் பத்திரிகைகள் எதுவும் அமைச்சரின் கூற்றைக் கண்டித்துக் கொதித்தெழவில்லை! அமைச்சருக்கு அஞ்சி— அமைச்சருக்கு கோபம் வரக்கூடாதென்ற எண்ணத்தில் பெட்டிப்பாம்பாக அடங்கிக் கிடந்தன.

சுதந்திரன் ஒன்றுதான் அமைச்சரின் தமிழ்த் துரோகத்தை அம்பலப்படுத்தி, அமைச்சருக்கு எதிராக தன்னந்தனியனாக நின்று எதிர்க் குரல் கொடுத்தது. இறுதியில் இரு திங்கள் கழித்து தாம் கூறியவற்றை வாபஸ் பெறவேண்டிய நெருக்கடியை சுதந்திரன் அமைச்சருக்கு ஏற்படுத்தியது; தமிழினத்தின் தன்மானமும் பிழைத்தது!

பாரதிபாடல் ஒன்றுக்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அநீதியாக தடை விதித்தது. இச்செய்தியை எல்லா ஏடுகளுமே இருட்டடிப்புச் செய்தன. சுதந்திரன் ஒன்றுதான் இதை அம்பலப்படுத்தி மக்களை விழிப்புறச் செய்தது. இதன் பயனாக பாடலுக்கு விதிக்கப்பட்ட தடை பொடிப் பொடியாகியது!

தமிழ் நாட்டு ஏடுகளை தடைசெய்திட வேண்டும்; அதன் மூலம் ஈழத்துக்கும் தமிழ் நாட்டுக்குமிடையே இருந்து வரும் இலக்கிய கலாசார உறவுகளைத் துண்டித்திட வேண்டுமென்று திட்டமிட்டது அரசாங்கம். தமிழ் மக்களுக்குப் பாதகமான இத்திட்டத்தை கடுமையாக எதிர்க்க வேண்டிய இந்நாட்டு ஏடுகள், தட்டிக்கொடுத்து வரவேற்றன. சுதந்திரன் மட்டுமே தனியே நின்று இந்த அநீதியை எதிர்த்துப் போராடியது! போராடியும் வருகிறது!

இப்படி தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக அரசாங்கம் செய்திடும் அநீதிகளை துணிகரமாக சாடியும் செய்யத்திட்டமிடும் சதிகளை அம்பலப் படுத்தியும் வருகிறது சுதந்திரன். ஆளும் கட்சிக்கு அபரிமிதமான செல்வாக்கு— அதிகார பலம் இருப்பது கண்டு ஏனைய பத்திரிகை ஆசிரியர்கள் போன்று அச்சமடைந்து பின் வாங்கிவிடவோ அமைதியடைந்து விடவோ இல்லை! சுதந்திரன் மூலம் எனது கடமையை நேர்மையாகவும் தயக்கமின்றியும் செய்துவருகிறேன்.

ஏனைய பத்திரிகைகளுக்கு இருப்பது போன்ற வசதி வாய்ப்புக்கள் சுதந்திரனுக்கு இல்லாதபோதிலும்—ஏனைய பத்திரிகைகளுடன் ஒப்பிடும்போது சுதந்திரன் உருவத்தில் சிறியதாகவும், வார இதழாகவும் இருந்திட்டபோதிலும், ஏனைய பத்திரிகைகள் போல ஆட்சியாளரின் காலை நக்கும் ஈனத்தனத்தில் ஈடுபடாது மக்களுக்கு சரியான பாதையைக் காட்டி —உண்மை நேர்மை, துணிவு ஆகிய மூன்று படைக்கலன்களுடன் சுதந்திரன் தமிழ் மக்களை வழிநடத்தி வருகிறது!

சுதந்திரனின் இந்த வளைந்து கொடுக்காத போக்குத்தான் அரசாங்கத்துக்கு தலை வேதனையைத் தந்துகொண்டிருக்கிறது! அந்த வேதனை தான் சுதந்திரன் ஆசிரியராக இருக்கும் என்மீது ஆத்திரமாக பரிணமித்திருக்கிறது.

நான் கைதுசெய்யப்படுவதற்கு முன்னர் ஒரு நாள் நடந்த ஒரு சம்பவத்தையும் இச்சமயத்தில் உங்களுக்கு கூற வேண்டும். ஒரு நாள் எனக்கு மிகவும் தெரிந்த நண்பர் —அரசாங்கக் கட்சி பிரமுகர்களுடன் நெருங்கிய பழக்கமுள்ளவர்- என்னிடம் வந்தார். உங்களுடன் ஒரு முக்கிய விஷயம்பேச வேண்டும்; ஆனால் அதற்கு முன் ஒரு நிபந்தனை: நான் கூறப்போகும் விஷயத்தை உங்களுடன் மட்டும் வைத்துக்கொள்ளுங்கள்; இதை நான் உங்களுக்கு கூறியதாக வேறுயாருக்கும் தெரியக்கூடாது; எனது பெயர் வெளியில் வரக்கூடாது; அதற்கு சம்மதமென்றால் கூறுகிறேன்' என்ற பீடிகையுடன் தொடங்கினார்.

'கடைசிவரை உங்களின் பெயரை வெளியிடமாட்டேன்; கூறவந்த விஷயத்தைக் கூசாமல் கூறுங்கள்' என்றேன். (அவருக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி அவரது பெயரை இங்கு வெளியிடாது விட்டுவிடுகிறேன்)

'உங்களுக்கு இஷ்டமானால் அரசாங்கத்தில் ஏதாவது பதவிபெற வாய்ப்பு இருக்கிறது; அரசாங்கத்தில் பெரிய பதவியில் இருக்கும் ஒருவர் இதுபற்றி உங்களின் அபிப்பிராயத்தை அறிந்து வரும்படி என்னிடம் கூறினார். உங்களுக்கு இஷ்டமானால்சரி; இல்லாவிட்டால்இப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிடுங்கள்' என்று கூறினார்.


ஆம், பதவி கொடுத்து என்னை விலைக்கு வாங்கும் முயற்சி இது!

நான் அவரிடம் அமைதியுடன் கூறினேன்:-

'சுதந்திரனில் நான் சம்பளத்துக்காக மட்டும் பணியாற்றிக் கொண்டிருக்கவில்லை. நான் ஏற்றுக்கொண்ட அரசியல் இலட்சியத்துக்காக என்னை நானே அழித்துக்கொண்டிருக்கிறேன். வேறு பதவி கிடைக்காததினால் பத்திரிகைத் துறைக்கு வந்தவனல்லநான். பத்திரிகைத் துறையில் பணியாற்றிட வேண்டுமென்று சின்ன வயதிலிருந்தே ஆசைப்பட்டுக் கொண்டிருந்தவன். பத்திரிகைத் துறையை வாஞ்சையுடன் நேசிப்பவன். அதுவும் நான் ஏற்றுக்கொண்டுள்ள அரசியல் இலட்சியத்துக்காக எனதுமனச்சாட்சியை அடவு வைக்காமல் எனது பேனாவை பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இத்துறையில் ஈடுபட்டுள்ளதால் எனக்கு சொந்த வாழ்க்கையில் கஷ்டங்கள் 'சிலபல விருக்கலாம். ஆனால் அக்கஷ்

(7-ம் பக்கம் பார்க்க)

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப்பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்
14 நாம் வீதி, கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலில் தி. மு. க. வின் வெற்றிக்கு

# பச்சை விளக்காக விளங்கியது மாநாடு!

## 20 இலட்சம் பேர் அலைகடலெனத் திரண்ட

## எழுச்சி மிகு காட்சி!

சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் தமிழக முதல்வரும் தி. மு. கழகத் தலைவருமாகிய கலைஞர் மு. கருணாநிதி மீண்டும் போட்டியிடுகிறார். ஏனைய தமிழ்நாட்டு அமைச்சர்களும் பழைய தொகுதியிலேயே போட்டியிடுகிறார்கள். மக்கள் திலகம் எம். ஜி ஆர். பரங்கிமலையில் போட்டியிடுகிறார். சென்னை சட்ட மன்றத்துக்குப் போட்டியிடும் 169 தொகுதிகளுக்கான கழக வேட்பாளர் பட்டியலை சென்னை அசோக் நகரில் நடைபெற்ற தி. மு. கழக தேர்தல் மாநாட்டில் கலைஞர் கருணாநிதி அறிவித்தார்:

## சைதாப்பேட்டையில் கலைஞர்!

### திருவல்லிக்கேணியில் நாவலர்!!

திராவிட முன்னேற்றக்கழகத்தின் முதல் வேட்பாளர் பட்டியல் சென்னையில் 24.1.71ல் நடைபெற்ற கழக மாநாட்டில் வெளியிடப்பட்டது. 20 இலட்சம் மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்ட இந்த மாநாடு கழகம் அடுத்த தேர்தலில் ஈட்டவிருக்கும் பெருவெற்றிக்கு பச்சை விளக்காக அமைந்தது.

இம்மாநாட்டில் கழகவேட்பாளர் பட்டியலும் தேர்தல் விஞ்ஞாபனமும் வெளியிடப்பட்டது.

வலது கம்யூனிஸ்ட் கட்சிக்கு 4 பாராளுமன்ற தொகுதிகளும் 10 சட்ட மன்றத் தொகுதிகளும் முஸ்லிம் லீக்கிற்கு ஒரு பாராளுமன்றத் தொகுதியும் 8 சட்டமன்றத் தொகுதிகளும் போர்வேட் புளக்குக்கு ஒரு பாராளுமன்றத் தொகுதியும் 9 சட்டமன்றத்தொகுதிகளும் தமிழரசுக்கழகத்துக்கு 2 சட்டமன்றததொகுதிகளும், பிரஜா சோசலிஸ்டுக் கட்சிக்கு 4 சட்டமன்றத் தொகுதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

மீதியுள்ள 201 சட்டமன்றத் தொகுதிகளிலும் தி. மு. கழகம் போட்டியிடவிருக்கிறது. 198 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் இதுவரை வெளியிடப்பட்டு விட்டது. 3 தொகுதிகளுக்கான பெயர்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை!

அமைச்சர்கள் அனைவரும் மீண்டும் பழைய தொகுதிகளிலேயே போட்டியிடுகின்றனர்.

கலைக்கப்பட்ட டெல்லிப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த பேராசிரியர் அன்பழகன், க. இராசாராம், அன்புச் செழியன் ஆகியோர் இம்முறை சட்டசபைக்கு போட்டியிடுகிறார்கள்.

கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். மீண்டும் பரங்கிமலையில் போட்டியிடுகிறார்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில் இரண்டு பேர் பெண்கள் போட்டியிடுகின்றனர். ஒருவர் அமைச்சர் சத்தியவாணி முத்து. அவர் பெரம்பூரில் போட்டியிடுகிறார். மற்றவர் மறைந்த அமைச்சர் கோவிந்தசாமியின் மனைவி பத்மாவதி அம்மாள். இவர் முகையூரில் போட்டியிடுகிறார்.

சென்னைநகரில் உள்ள மொத்தம் 12 தொகுதிகளில் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலின்படி 8 இடங்களில் கழகம் போட்டியிடுகிறது. துறைமுகம் தொகுதியும் மைலாப்பூர் தொகுதியும் முறையே முஸ்லிம் லீக்குக்கும் தமிழரசுக் கழகத்துக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சென்ற தேர்தலில் தியாகராயநகரில் போட்டியிட்ட தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் இம்முறை மைலாப்பூரில் போட்டியிடுகிறார். ஏனைய இடங்களில் போட்டியிடுவோர் விபரம்வருமாறு:-

### தமிழ் நாட்டில் தேர்தல் நாட்கள்

வேட்பு மனுதாக்கல் செய்ய கடைசி நாள்:-பெப்ரவரி 3

வேட்புமனு மறுபரிசீலனை:- பெப்-4

மனுதிரும்பப் பெற கடைசி நாள்:-பெப்ரவரி - 8

வாக்குப்பதிவு:-மார்ச்1, 4, 7

## தமிழ்நாட்டுச் செய்திகள்

சைதாப்பேட்டை
கலைஞர் மு. கருணாநிதி

சென்ற தேர்தலில் கிடைத்த வாக்குகள் விபரம்:—

| | |
|---|---|
| மு. கருணாநிதி | 53,401 |
| எஸ். ஜி. விநாயகமூர்த்தி (காங்கிரஸ்) | 32,919 |
| மேலதிக வாக்குகள் | 20,482 |

ஃ

திருவல்லிக்கேணி
இரா. நெடுஞ்செழியன்

1967 தேர்தலில் கிடைத்த வாக்குகள் விபரம்:—

| | |
|---|---|
| இரா. நெடுஞ்செழியன் | 38,721 |
| சம்பந்தப்பா (காங்கிரஸ்) | 26,027 |
| மேலதிக வாக்குகள் | 12,694 |

ஃ

ஆயிரம் விளக்கு
கே. ஏ. மதியழகன்

சென்ற தேர்தல் முடிவுகள்:—

| | |
|---|---|
| கே. ஏ. மதியழகன் | 39,518 |
| மீனம்பாள் சிவராஜ் (காங்கிரஸ்) | 25,370 |
| மேலதிக வாக்குகள் | 14,148 |

ஃ

வண்ணாரப்பேட்டை
எம். வேதாசலம்

சென்ற தேர்தல் முடிவுகள்:—

| | |
|---|---|
| எம். வேதாசலம் | 34,571 |
| மாயாண்டிநாடார் (காங்கிரஸ்) | 27,329 |
| மேலதிக வாக்குகள் | 7,242 |

ஃ

பேசின்பிரிட்ஜ்
எம். ஆர். கண்ணன்

சென்ற தேர்தல் முடிவுகள்:—

| | |
|---|---|
| எம். ஆர். கண்ணன் | 40,109 |
| கே. ராமதாஸ் (காங்கிரஸ்) | 30,757 |
| மேலதிக வாக்குகள் | 9,352 |

ஃ

பெரம்பூர்
திருமதி. சத்தியவாணி முத்து

சென்ற தேர்தல் முடிவுகள்:—

| | |
|---|---|
| சத்தியவாணி முத்து | 40,364 |
| டி. சுலோசனு (காங்கிரஸ்) | 33,677 |
| மேலதிக வாக்குகள் | 6,687 |

ஃ

புரசவாக்கம்
பேராசிரியர் அன்பழகன்

சென்ற தேர்தல் முடிவுகள்:—

| | |
|---|---|
| வி. எஸ். கோவிந்தராஜ் (தி. மு. க.) | 41,272 |
| தாமோதரன் (காங்கிரஸ்) | 29,046 |
| மேலதிக வாக்குகள் | 12,226 |

ஃ

எழும்பூர்
அரங்கண்ணல்

சென்ற தேர்தல் முடிவுகள்:—

| | |
|---|---|
| ஏ. வி. பி. ஆசைத்தம்பி (தி. மு. க.) | 36,133 |
| ஜோதிவெங்கடாசலம் (காங்கிரஸ்) | 29,187 |
| மேலதிக வாக்குகள் | 6,946 |

ஃ

மைலாப்பூர்
ம. பொ. சிவஞானம்

சென்ற தேர்தல் முடிவுகள்:—

## மைலாப்பூரில் ம. பொ. சி. போட்டி
## பரங்கிமலையில் மீண்டும் எம். ஜி. ஆர்.

| | |
|---|---|
| அரங்கண்ணல் (தி. மு. க) | 37,498 |
| வீ. ஆர். ராதாகிருஷ்ணன் (காங்கிரஸ்) | 28,270 |
| மேலதிக வாக்குகள் | 9,228 |

ஃ

பரங்கிமலை
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

சென்ற தேர்தல் முடிவுகள்:—

| | |
|---|---|
| எம். ஜி. ஆர். | 54,106 |
| ரகுபதி (காங்கிரஸ்) | 26,432 |
| மேலதிக வாக்குகள் | 27,674 |

ஃ

[illegible] டத்துலுள்ள ஸ்ரீ வைகுண்டம்

### டெல்லிக்கு போட்டியிடுவோர்

தமிழ் நாட்டில் உள்ள 39 டெல்லிப் பாராளுமன்றத் தொகுதிகளில் 6 தொகுதிகள் கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்றன. மீதியுள்ள 33 தொகுதிகளில் 28 தொகுதிகளுக்கு போட்டியிடும் தி. மு. க. வேட்பாளர்களின் விபரம் பின்வருமாறு:

O வட சென்னை-மனோகரன்
O தென் சென்னை-மாறன்
O ஸ்ரீபெரும்புதூர் (ரிசர்வ்)- லட்சுமணன்
O செங்கல்பட்டு-சிட்டிபாபு
O வேலூர் (ரிசர்வ்)-உலகநம்பி
O திருப்பத்தூர் - சின்னராஜ்
O வந்தவாசி-ஜி. விசுவநாதன
O சிதம்பரம் (ரிசர்வ்) - மாயவன்
O கிருஷ்ணகிரி-கமலநாதன்
O சேலம்-இ. ஆர் கிருஷ்ணன்
O திருச்செங்கோடு- மா. முத்துசாமி
O நீலகிரி-மாதாவுண்டர்
O பொள்ளாச்சி- உடுமலை நாராயணன்
O தாராபுரம்- (ரிசர்வ்) சி. டி. தண்டபாணி
O கோபிச் செட்டிபாளையம்-சாமிநாதன்
O திண்டுக்கல்-ராஜாங்கம்
மதுரை-காவேரிமணியம்
கரூர்-நாகராஜன்
O பெரம்பலூர்-ஆ. துரைராஜ்
புதுக்கோட்டை-வீரய்யா
O கும்பகோணம்-செழியன்
O மாயவரம்-சுப்ரவேலு
தஞ்சை-எஸ். டி. சோமசுந்தரம்
O சிவகெங்கை-தா. கிருஷ்ணன்
சிவகாசி-விருதுநகர் சீனிவாசன்
நாகர் கோவில்-எம். சி. பாலன்
O கள்ளக்குறிச்சி-தெய்வீகன்
O திண்டிவனம்-கொளத்தூர் கோதண்டம்

திருத்தணி, O கடலூர், O மேட்டூர், தென்காசி, திருச்செந்தூர், ஆகிய 5 பாராளுமன்றத் தொகுதிகளின் தி. மு. க. வேட்பாளர் பெயர்கள் இன்னும் வரவிருக்கின்றன.

O இந்த அடையாளங்கள் போடப்பட்டுள்ள தொகுதிகள் யாவும் கடந்த 1967 பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் கைப்பற்றியுள்ள தொகுதிகளாகும்.

தொகுதியிலிருந்து சி. பா. ஆதித்தனார் போட்டியிடுகிறார் இத்தொகுதியில் சென்ற தேர்தலின் போது கிடைத்த வாக்குகள் வருமாறு:

| | |
|---|---|
| ஆதித்தனார் | 41,828 |
| இராமசாமிநாடார் (காங்கிரஸ்) | 22,767 |
| மேலதிக வாக்குகள் | 19,161 |

ஃ

தியாகராய நகர்
டி. வி. நாராயணசாமி

சென்ற தேர்தல் முடிவுகள்:—

| | |
|---|---|
| ம. பொ. சி. (தி. மு. க.) | 37,662 |
| கே. எம். சுப்பிரமணியம் (காங்கிரஸ்) | 27,669 |
| மேலதிக வாக்குகள் | 9,993 |

### தமிழரசு தந்தை முன்மாதிரி காட்டுகிறார்!

அண்மையில் காவலூர் பா. உ. கேட்ட இரண்டு வினுக்களுக்கு உதவி கல்வி அமைச்சர் பதிலளிக்காது செய்தித் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையை சபையில் சமர்ப்பித்தது உறுப்பினரின் தன்னுரிமையைப் பாதிப்பதாகுமென்றும், பாராளுமன்றத்தை அவமதிப்பதாகுமென்றும் இது சம்பந்தமாக நடவடிக்கையெடுக்குமாறும் சபாநாயகருக்கு தந்தை செல்வா அவர்கள் தனித் தமிழில் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமது கட்சிக் கொள்கைக்கிணங்க இக்கடிதத்தை தமிழிலே எழுதுவதாகவும் தந்தை அவர்கள் கூறியிருக்கிறார். தந்தையைப்பின்பற்றி எல்லாத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழிலே தங்கள் கடிதத் தொடர்புகளை வைத்துக் கொண்டால் தமிழ் உரிமையை நிலைநாட்ட வழி பிறக்குமே!

———

### நான் கைதி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டங்களுக்காக எனது இலட்சியப் பணியிலிருந்து பாதை மாறிடப்போவதில்லை - என் மீது நீங்கள் காட்டிய அன்புக்கு நன்றி''

இவ்வாறு கூறி அந்த நண்பரை அனுப்பி வைத்தேன்.

ஆம், நான் சுதந்திரன் ஆசிரியராக - சம்பளத்துக்காக மட்டும் பணியாற்றுபவனாக இருந்திடின் நேரம் காலம் பார்க்காது-எனது உடல் சுகவீனத்தைப் பற்றியும் கவலைப்படாது—வேலைப் பழு அனைத்தையும்நானே தன்னந்தனியாக கடந்த சில ஆண்டுகளாக சுமந்து கொண்டிருந்திடத்தேவையில்லையே! தேர்தல் காலத்தில் இரவு பகல் என்று கண்விழித்து என்னை அழித்துக்கொண்டு இருதினங்களாக சுதந்திரன் நாளேட்டை நடாத்தியிருக்கத் தேவையில்லையே!

இந்த எனது இலட்சியப் பற்றை உணராதவர்கள் பதவி கொடுத்து விலைக்கு என்னை வாங்கிட முயன்று தோற்றார்கள்.

இறுதியில் 1970ம் ஆண்டு அக்டோபர் 26ம் திகதி இரவு பழைய ரூபா நோட்டுக்களை செல்லாமல் செய்வது சம்பந்தமாக அரசாங்கம் பிரகடனப்படுத்திய அவசரகால சட்டவிதிகள் என்னை நோக்கி ஏவி விடப்பட்டன.

## வளரும்

### மாநாட்டில் ரூ $1\frac{3}{4}$ லட்சம் வசூல்!

சென்னையில் நடைபெற்ற தி. மு. க. மாநாட்டின் மொத்த வசூல் ரூ 1 லட்சத்து 75 ஆயிரம். இதை மாநாட்டில் கழக தலைவர் கலைஞர் கருணாநிதி அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடாவையைக் குடாவினுர் ஈழவேந்தன் கிடைத்தது புன்னகைதான்; பதில் அல்ல!

## வத்தளை தமிழ்ப் பொதுமன்ற ஆண்டு விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சி!

கடந்த 14-1-71ல் வத்தளை 'விஜயா ஸ்டூடியோவில்' மாலை 5½ மணி வரையில் வத்தளை தமிழ்ப் பொதுமன்றத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்புற நடைபெற்றது.

மன்றச் செயலாளர் திரு. வெ. யோசெப் வரவேற்புரை நிகழ்த்த மன்றத் தலைவர் திரு. க. செல்லையா விழாவிற்கு தலைமைதாங்கினுர்.

விழாவில் சிறப்புச் சொற்பொழிவாளரான திரு. ஈழவேந்தன் கலந்துகொண்டு தைப்பொங்கலின் தனிச் சிறப்பினை எடுத்து விளக்கியதோடு தமிழ்ப்பேசும் மக்களின் பொதுநலன்களைப் பாதுகாக்க தோன்றியிருக்கும் வத்தளை தமிழ்ப் பொதுமன்றம் தமிழ் மக்களின் உயிராய் விளங்கும் தமிழினைக் காக்க பொங்கல் நாளாகிய இன்று உறுதிபூணவேண்டும் என்று வேண்டினுர்.

அவர் மேலும் கூறுகையில் மொழி ஒரு இனத்தின் வழி மட்டுமல்ல. அது அதனின் உயிரும் ஆகும் என்ருர். உயிராகிய மொழி அழிகின்ற போது அம்மொழி பேசும் இனப்பெயர் நீங்கிப் பிணமாய் மாறுவதை எவரும் தவிர்க்கமுடியாது: மொழி வரலாறுகளும் அரசியல் வரலாறுகளும் இக்கசப்பான உண்மையையே வலியுறுத்தியபடியிருக்கின்றன. குறிப்பாக தமிழ் மாணவர்களின் பயிற்சிமொழி தமிழ்தான் என்பதை மன்றம் மருந்தளவும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்று கூறினுர். "பெற்ருேர் விரும்பிய மொழி" என்று அரசாங்கம் கையாளும் சொற்தொடர் தமிழ் இனத்தை புதைகுழியில் தள்ளும் சதித்திட்டம் என்று எச்சரித்தார்.

மொழியில் சமத்துவம் தராது சிங்களம் மட்டும் சட்டத்தை தமிழ் மக்களின் ஒருமித்த எதிர்ப்புக்குக்கிடையில் கொண்டுவந்து நிறைவேற்றிய அரசாங்கம் கல்வித் துறையிலேயோ, உத்தியோகத்துறையிலேயோ எமக்கு ஒத்த வாய்ப்பைத் தரும் என்று எண்ணி ஏமாறுவதைப்போன்ற உச்சக்கட்ட மடமையை எங்கும் காண முடியாது: ஆகவே தமிழ் இனத்திற்கு நிலையான அரசியல் பாதுகாப்பு கிடைக்கும் வரைக்கும் சிங்களத்தை எந்நிலையிலும் ஏற்றல் எம் இனத்தின் தற்கொலைக் கொப்பான செயல் என்று இடித்துரைத்தார்.

தன் பேச்சின் இறுதியில் மாண்புமிகு துணைக்கல்வி அமைச்சர் திரு. துடாவை அவர்களை நேரில் விளித்து சிங்கள மக்களுக்கு இருக்கும் அதே இன உணர்வு, மொழிப்பற்று சமய வேட்கை தமிழ் மக்களுக்கும் உண்டென்பதை நாட்டின் அமைச்சர்கள் நன்கு உணரவேண்டும் என்று கூறிய ஈழவேந்தன் அவர்கள் தமிழர்களும் மனிதர்கள்தான் என்பதை எவரும் மறக்கவோ மறுக்கவோ கூடாது என்று கூறினுர்.

புத்தமதத்தைப் பின்பற்றுவதாக கூறும் இவ்வரசாங்கம் "புத்தரின் போதனைகளை எம்மொழியில் யாம் உலகிடை பரப்பவேண்டும் என்று புத்தகுருமார் புத்தரை வினவியபோது ஒவ்வொருவரும் தத்தம் மொழிகளில் தான் அறிவுரைகளைப் பரப்புங்கள்" என்று புத்தர் பெருமகன் கூறியதை நினைவிற்கொண்டு சிங்களமொழி ஒன்றுதான் புத்த மதத்தின் தனிக்காவல் மொழி என்ற தப்பான எண்ணத்தைக் கைவிட்டு புத்தர் புவிக்குக் காட்டிய புனித வழியில் சென்று இந்நாட்டை நல்வழியில் முன்னேற்றவேண்டும் என்று பலத்த கைதட்டுதலுக்குக்கிடையில் கூறி தன் பேச்சை முடித்தார்.

ஈழவேந்தனை அடுத்து உரைநிகழ்த்திய கல்வித் துணை அமைச்சர் துடாவை அவர்கள் ஈழவேந்தனின் பேச்சிற்கு பதில் அளிக்கும் தொனியில் தமிழ் மக்கள் மீது சிங்களம் எந்நிலையிலும் திணிக்கப்படமாட்டாது. தமிழ்ப்பிள்ளைகள் தமிழிலேயே பயில்வதற்கு எவ்வித தடையுமில்லை என்று கூறினுர். அவர் மேலும் கூறுகையில் தமிழ் மக்களின் மொழிப்பற்றை தாம் பெரிதும் மதிப்பதாகவும் இனமத பேதம் கடந்த நிலையில் சோசலிச பாதையிலேதான் நாட்டின் முன்னேற்றம் தங்கியிருக்கிறதென்றும் கூறிமுடித்தார். அமைச்சரின்பேச்சு சிங்களத்தில் அமைந்திருந்தது மன்றத் தலைவரினுல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

அமைச்சர் தன் பேச்சை முடித்தபின் இருப்பிடத்தை நாடியபோது ஈழவேந்தன் அவர்கள் அவர் அருகிற் சென்று சுவையான உரையாடலில் ஈடுபட்டிருந்தார். உரையாடல் ஆங்கிலத்தில் நடைபெற்றது. தமிழ் மக்கள்மீது சிங்களம் எந்நிலையிலும்திணிக்கப்படமாட்டாதுஎன்று தமிழர்கள் மத்தியில் அடிக்கடி உறுதி அளிக்கிறீர்கள். அந்த உறுதி மொழி கேட்டு மகிழ்ச்சி அடைகிருேம். ஆனுல் நடைமுறையில் உங்கள் அரசாங்கத்தின் போக்கு எமக்குப் பெரும் அச்சத்தையல்லவோ தருகிறது என்ருர்.

குறிப்பாக பயிற்சிமொழி விடயத்தில் தமிழர் மீது சிங்களத்தைத் திணிப்பது உங்கள் நோக்கம் இல்லையெனின் 'பெற்ருேர் விரும்பிய மொழியல்ல — தாய் மொழிதான் பயிற்சிமொழியாய் இருக்கவேண்டும்என்று தமிழ் இனத்தின் பேராளர்கள் (பிரதிநிதிகள்) நாடாளுமன்றத்தில் அரியணை உரைக்கு திருத்தம் கொண்டு வந்தபோது ஏன் உங்கள் அரசாங்கம் அக்கோரிக்கையை நிராகரித்தது என்று கேட்டார்.

பதில்கூற முனைந்த அமைச்சர் சில தமிழ்ப் பெற்ருேர் தங்கள் குழந்தைகளுக்கு சிங்களத்தில் கல்வியூட்ட விரும்பக் கூடும். அதுபோல் சில சிங்களப் பெற்ருேர் தம் குழந்தைகளுக்குத் தமிழில் கல்வி கற்பிக்க விருமபக் கூடும். இந்த உரிமையைத் தடுப்பது குடியாட்சிப் பண்பிற்கு மாறுபட்டதென்ருர்.

பயிற்சி மொழியில் குடியாட்சிப் பண்பு பேசும் நீங்கள் தமிழ் மக்களின் முழு எதிர்ப்புக்கிடையில் சிங்களம மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தபோது குடியாட்சிப் பண்பு பற்றி எண்ணவில்லையோ என்று வினவினுர். அதுமட்டுமல்ல இலங்கையில் தென் பகுதிகளில் கல்லூரிகளில் தமிழ்ப் பிரிவுகளைத் தொடர்ச்சியாக மூடிவிட்ட பின் தமிழ்ப் பெற்ருேர் தம் குழந்தைகளுக்குத தமிழில் கல்வி பயிற்றுவிக்கலாம் என்று கூறுவதில் எதுவித பொருளுமில்லை என்று

(10-ம் பக்கம் பார்க்க)

---

# தத்தை விடு தூது

### அத்தியாயம் (3)

சிவகாமியின் அன்புமுகத்தைப் பார்க்க முடியாமல் சரவணமுத்து தடை செய்யப்பட்ட நாள் அவன் மனதிலே இன்னும் பசுமையாக இருக்கிறது. அப்போது சரவணனுக்கு பதினுன்கு வயதிருக்கலாம். அவன் ஏதோ படித்துக் கொண்டிருந்தான். சிவகாமி பருவமடைந்து விட்ட செய்தியை யாரோ தம்பிமுத்துப்பிள்ளையின் காதோடுகாதாகக் கூறி விட்டுச் செல்கின்றனர். சில நிமிடங்கழித்து அதே செய்தியை சிவகாமியின் அப்பாவே நேரடியாகவந்து தம்பிமுத்துப்பிள்ளையிடம் நேரடியாகக் கூறிவிட்டுச் செல்கின்ருர் தம்பிமுத்துப்பிள்ளைக்கு உள்ளங்கொள்ளாத மகிழ்ச்சி. என்ன செய்வதென்று தெரியாத நிலையில் அவர் திக்குமுக்காடிப் போய் விடுகிருர். ஆயினும் அவர் உள் மனதில் இதுகாலவரை நீறுபூத்த நெருப்புப்போல் இருந்த ஏதோ ஒரு துன்பம் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்டு அவரை வாட்டுகிறது;

ஆமாம்! கடந்த வருடம் திடீர் எனக் காலன் கைப்பட்டு அவரை விட்டுப்பிரிந்த அவர் மனைவி வள்ளியம்மையின் ஞாபகம் அவருக்கு வந்து விடுகிறது. அவள் இறப்பதற்கு இரண்டு மூன்று மாதங்கள் முன்கூட்டியே இதை எதிர் பார்த்திருந்தாள். ஆனுல் இந்த மங்களகரமான நிகழ்ச்சியில் பங்கு கொள்ள அவளுக்குக் கொடுத்துவைக்காமற் போய் விட்டது.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி அவள் பற்பல மனக்கோட்டைகள் கூடக்கட்டி எழுப்பியிருந்தாள். தன் வருங்கால மருமகள் என்ற கோதாவில் சிவகாமிக்குக் கொடுப்பதற்கென்று தனது விலையுயர்ந்த முத்து மாலையைக் கூட ஒரு பெட்டியில் இட்டுப் பத்திரப்படுத்தியிருந்தாள். ஒரு நாள் அதை அவரிடம் கூறவுஞ் செய்தாள். அப்போது அவர் 'அப்பாடா பருவம் அடையும்போது கொடுப்பதற்கே இவ்வளவு உயர்ந்த பரிசென்ருல் நாளைக்கு நம்ம சரவணன் அவளைக் கைப்பிடிக்கும் போது நீ வீட்டுச் சாவியையே அவளிடம் ஒப்புவித்து விடுவாயாக்கும் என்ற குறும்புசெய்ய' கனகனுக்கும் திருமணம் முடிந்து சரவணனுக்கு ஏற்ற மனைவியாக நம்ம சிவகாமி வீட்டுக்கு வந்தப்புறம் நமக்கேன் வீட்டுச் சாவி? இரு மருமக்களும் அறுசுவை உணவுபோடுவார்கள். நாம் நேரத்திற்கு நேரம் வயிற்றை நிரப்பி விட்டு சிவா! சிவா! பாராயணந் தொடங்க வேண்டியதுதான் என்று அவள் கூற இருவருமே வாய்விட்டுச் சிரிப்பார்கள்;

அந்த நிகழ்ச்சி அவர் உள்ளத்தை நெகிழ வைத்து விடுகிறது. அவர் கண்களில் இரண்டு துளி நீர் பெருக்கெடுத்தோட அதைத் தன் சுண்டுவிரலால் தெறித்து விட்டபடி பெருமூச்செறிகிருர்.

இந்த மகிழ்ச்சியில் பங்கு கொள்ளத் தன் மனைவி இல்லையே என அவர் மனம் வேதனைப்படுகிறது. ஆயினும் அவர் தன் உள்ளத்தைத் தேற்றிக்கொள்கிருர்; ஏதோ நினைத்துக் கொண்டவராய் வீட்டுக்குட் சென்று அலுமாரியைத்திறந்து அதற்குள் வள்ளியம்மையால் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த முத்துமாலைப் பெட்டியைத் தூக்கி தன் சட்டைப்பைக்குட் திணித்துக் கொண்டு வேகமாக வெளிய செய்கிருர். அவர் கால்கள் சிவகாமி வீட்டை நோக்கித் துரித நடை போடுகின்றன. அவன் செல்வதைப் பார்த்த சரவணன் அவர் பின்னல் ஓடோடிச் சென்று எங்கே அப்பச இந்த அதிகாலையிற் செல்கிறீர்கள் என்று இடை மறிக்கிருன்; அவன் கண்களில் ஆவல் ததும்பிவழிகிறது. தம்பிமுத்துப்பிள்ளை இப்படித்தான் சில வேளைகளில் ஏதோ நினைத்துக் கொண்டு திடீர் எனப் புறப்பட்டுச் சிவகாமி வீட்டுக்குப் போவார். அதே சாட்டைவைத்து சரவணனும் அவருடன் தொற்றிக் கொள்வான். அவனது வினை தம்பிமுத்துப்பிள்ளைக்குச் சிரிப்பை வரவழைக்கிறது. அவர் தன் கொடுப்புக்குட் சிரித்தபடியே நீ போய்ப்படி நான் வரோதய மாமா வீடு வரை போய் வருகிறேன் என அவன் முதுகில் தட்டிக் கொடுக்கிருர். 'நான் எல்லாம் படிச்சு முடிச்சாச்சு இப்போ நானும் உங்க கூட வரப்போறன்; நீங்க வரோதய மாமாவைப் பாருங்க; நான் சிவகாமியைப் பார்க்கப் போறன்.'

அவனது சாதுரியப் பேச்சால் தம்பிமுத்து ஒருமுறை தத்தளித்து விடுகிருர். இருந்தும் அவனை எப்படியாவது சமாளித்து விட வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் இப்போ சிவகாமியைத்தான் பார்க்கப் போகிறேன் சரவணு. நீ ஆறுதலாகப் பார் அப்பா' என்கிருர்.

'நானும் உங்களுடன்தான் வருகிறேன் அப்பா விடாப்பிடியாகத் தொடருகிருன் சரவணன். தம்பி முத்துப்பிள்ளையின் நிலை தர்ம சங்கடமாய் விடுகிறது. இனி அவனிடம் உள்ளதைச் சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற நிலையில்' இனி நீசிவகாமியை அடிக்கடி பார்க்க முடியாது. அவள் பெரியவளாகி விட்டாள் என்று கூறிவிட்டு மகனைப் பார்க்கக் கூச்சப் பட்டவர் போல் பக்கத்தில் முகிழ் அவிழ்ந்திருந்த முல்லை மலர்களின் மேல் தன் பார்வையைப் பதித்துக் கொள்கிருர். சரவணன் மறுபேச்சின்றி வீட்டுக்குத் திரும்பிச் செல்[illegible] பது அவர் கண்களில் படுகிறது. அவர் மெதுவாக நிமிர்ந்து சென்று கொண்டிருக்கும் அவனையே கண்வெட்டாமற் பார்க்கிருர். திடீர் எனச்சரவணன் தன்னைவிடப் பல்லாண்டுகள் முதிர்ந்து விட்டது போன்ற உணர்வு தோன்றுகிறது அவரிடத்தில். இப்போது சிவகாமியைப் பற்றி நான் கூறியதில் இவனுக்கு என்ன விளங்கியிருக்கும் முப்பது வயது மனிதனைப்போல நடந்து செல்கிருனே. அவனுக்குப் போய் நான் இனி என்னத்தைத் கூறுவது. எனக்கே அவனுடன் பேச வெட்கமாயிருக்கிறது. ம்! ஒருவேளை இப்போது அவனுடைய அம்மா இருந்திருந்தால் அவனுடன் மனம் விட்டுப் பேசிருப்பாளாக்கும்!

அவர் தனக்குள்ளாகப் பேசிச் சிரித்துக் கொண்டே சிவகாமியின் வீட்டை நோக்கி நடக்கிருர். சிவகாமியின் அலுவல்கள் எல்லாம் ஒருவாறு முடிவடைகின்றன. இப்போது அவள் வீட்டை விட்டே வெளியேறுவதில்லை; அவளுக்கு அத்தனை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. சரவணனுக்கு அவளைப் பார்க்காமல் பசியே எடுப்பதில்லை. அவளை எப்படியாவது பார்த்தாற்தான் மனம் ஆறுதல் அடையும் போலிறதோர் தவிப்பு. அந்தத் தவிப்பின் தாக்கத்திஞல் உந்தப் பட்டவனுய் துணிவு பெற்றுச் சிவகாமியின் வீட்டைநோக்கி நடக்கிருன். ஆனுல் அவனுக்குத்தான் என்ன ஏமாற்றம்! பாவம்! அவன் அங்கே காலடி எடுத்து வைக்கும் போது அவர்கள் வீட்டுக் கதவு அடைபடுகிறது. உள்ளம் உடைந்த நிலையில் தாளாத துயரத்துடன் வீடு திரும்பிப் புலம்புகிருன்;

பன்னிரு யாண்டவ  
ளொடுயான்  
பயின்றிருந்து மிக்காலம்  
கன்னிமுக நோககவிடார்  
கதவடைத்தார்  
கருணையிலார்  
என்னிரு கண் மணியனையா  
ளெனக்குரிய  
ளென்றிருந்தேன்  
என்னேயெனதெண்ண  
மின்றுபட்ட வாறந்தோ  
ஏதிலனுயிங்கே  
யிரங்குவன்யான்  
பைங்கிளியே

யாருடைய துன்பத்திற்கும் இன்பத்திற்குங் காத்திராமல் காலச்சக்கரஞ் சுழல்கிறது; சரவணன் மணப்பருவத்தை அடைந்து விடுகிருன். சிவகாமிவீட்டுக்கு அவள் அப்பாவிடம் முறைப்படி பெண் கேட்கத்தம்பி முத்துப்பிள்ளை செல்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினபதியாரின் குட்டு 13 நாளில் உடைந்தது!

## குமாரசூரியரின் இயலாமையை கோடிட்டுக் காட்டிய சம்பவம்!

## தமிழ்உணர்வை மழுங்கடித்திடுவதில் தினபதி தினகரன்போட்டாபோட்டி!

### ஆளுங்கட்சியினரின் காலை நக்கிடும் இரு தமிழ் தினசரிகளின் ஈனத்தனம்!




கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளேக்கென்பார்கள் ஆனால் தினபதியாரின் புழுகு ஒன்று 13 நாட்களில் அம்பலமாகி விட்டது. அதுவும் தினபதியாருக்கு தனது செய்தியை தானே மறுக்கவேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டு விட்டது.

தமிழ் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இன்றைய அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்குவதிலும் சிங்கள அரசாங்கத்தின் கைப் பொம்மையாக விளங்கி தமிழினத்தை ஒழித்துக்கட்ட உடைந்தையாக இருந்துவரும் திடீர் அமைச்சர் குமாரசூரியரைத் தூக்கி விடுவதற்கு 'படாத பாடு பட்டு பொய்ச் செய்திகளை சிருட்டித்து வெளியிடுவதிலும், ஏரிக்கரைத் தினகரனும், தவச, 'தினபதியும்' ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு வருவது தமிழ் மக்கள் அறிந்ததே.

தமிழ் பேசும் மக்களை காட்டிக்கொடுப்பதிலும் தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கமான தமிழரசுக்கட்சி மீது வீண்பழி சுமத்தி பொய்ச் செய்தி வெளியிடுவதிலும் தமிழரசுக் கட்சிக்கும் சமஷ்டிக் கோரிக்கைக்கும் எதிரான கருத்துக்களை யாராவது குப்பைகூளங்களிடமிருந்து கேட்டு வாங்கி, அவற்றை 'அது'களின் படங்களுடன் முன்பக்கத்தில் பெரிய தலைப்புக்கள் கொடுத்து வெளியிடுவதிலும் தினகரனும், தினபதியும் போட்டியிட்டுவருகின்றன. ஆம், தமிழினத்துக்கு அதிகம் நஞ்சூட்டுவது—தமிழினத்தின் கழுத்தையறுப்பது—தமிழர்களின் விடுதலை உணர்வை மழுங்கடிப்பது ஆளுங்கட்சிக்கு துதிபாடிடுவது—அமைச்சர் குமாரசூரியரின் காலை நக்குவது—போன்றவற்றில் எனக்கா உனக்கா முதலிடம் என்பதிலே தான் தினபதியாரும், தினகரனும் முட்டிமோதிக் கொள்கிறார்கள்!

அமைச்சர் குமாரசூரியர் குனிவது போன்ற படத்தைத் தினகரன் போட்டால் குமாரசூரியர் நிமிர்வது போன்ற 'போஸ்' ஒன்றைத் தினபதியார் பிரசுரிப்பார்! அமைச்சர் குமாரசூரியர் எழும்புவது, இருப்பது, படுப்பது, சாமி கும்பிடுவது யாவும் தினகரனுக்கு இப்போது முன்பக்க முகப்புச் செய்திகளாகிவிட்டன! குமாரசூரியரை விட்டால் வேறு செய்தியில்லையென்ற பரிதாப நிலை தினகரனுக்கு!

தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட வீ. பொன்னம்பலம், மக்களால் தெரிவு செய்யப்படாத செ. குமாரசூரியர் போன்றவர்களைத் தமிழ் மக்களின் செயற்கைத் தலைவர்களாக்கி தமிழ் மக்கள் மீது திணிக்க தினகரனும் தினபதியும் படாதபாடு படுகின்றன. கதிரவேலு, விஜேதன், அல்பிரட்துரையப்பா, துளசிகாமணி, விசுவநாதன், போன்ற அட்ரஸ் இல்லாத அனுமதேயங்கள் தாம் தினகரன் இப்போது கண்டுபிடித்துள்ள 'தமிழ்ப் பிரமுகர்கள்'!

தமிழ்ப் பகுதி யூ. என். பி. யான தமிழ் காங்கிரசைக் கைதூக்கிவிடவும், தமிழரசுக் கட்சியினரை வீழ்த்துவதற்கும், தினபதியாரும் தினகரனும் கடந்த பொதுத் தேர்தலில் மூக்கி முனகி முயன்று மூக்குடைபட்டதை யாரும் இன்னும் மறந்திருக்க மாட்டார்கள்.

இப்பொழுது தினகரனும், தினபதியும் ஐக்கிய முன்னணி எடுபிடிகளைத் தூக்கி விட முயலுகின்றன. இந்த முயற்சியும் படுதோல்வியிலேயே முடிந்துவருகின்றது.

தமிழ் மக்களின் உணர்ச்சிக்கு எதிராக நீச்சல் அடிக்க முயலும்தினகரனும், தினபதியும் இன்று கேலிப் பொருள்களாகத்தான் மதிக்கப்படுகின்றனவே தவிர யாரும் இப்பத்திரிகைகளை மதிப்பது கிடையாது!

அண்மையில் அமைச்சர் குமாரசூரியருக்கு முடிசூட்ட முயன்ற தினபதியார் பல தடவைகளில் மூக்கறுபட்டார்!

அமைச்சர் குமாரசூரியரின் முயற்சியால்தான் அரசியல் நிர்ணயசபை வழிமுறைக் குழுவில் தமிழரசு பா. உ. க்கள் இருவருக்கு இடம் கிடைத்ததாக போட்டார் ஒரு போடு... அது முழுப் பொய் என்பதையும் குமாரசூரியருக்கும் தமிழரசுக் கட்சி வழிமுறைக் குழுவிலிடம் பெற்றதற்கும் எதுவித சம்பந்தமுமில்லையென்பதையும் நாடாளுமன்றத்தில் காவலூர் பா. உ. தெளிவுற எடுத்துக் கூறி தினபதியாரின் புரட்டை உடைத்துவிட்டார்!

ஆங்கிலத்தின் இடம் தமிழுக்கு—குமாரசூரியர் திட்டம் அங்கீகரம்—என்றொரு செய்தியை போட்டு குமாரசூரியரை உச்சாணிக் கொப்பில் ஏற்றினார் தினபதியார். ஆனால் ஆங்கிலத்தின் இடம் தமிழுக்கு தரப்படமாட்டாதென்பது மட்டுமல்ல—1966ம் ஆண்டு தமிழ்மொழி சட்டவிதிகள் கூட ரத்து செய்யப்படப் போகிறது என்பது இப்போது உண்மையாகி விட்டது.

அதுமட்டுமல்ல - ஆங்கிலத்தின் இடம் தமிழுக்கு இந்த அரசால் தரப்படவில்லை என்பதையும் - குமாரசூரியர் திட்டம் அதோ கதியாகி விட்டதென்பதையும் 24-1-70 தினபதியில் அத்தாணி மண்டபத்தில் அரசசேசரியாரே ஒப்புக்கொண்டு விட்டார்!

தினபதியார் அமைச்சர் குமாரசூரியருக்கு புகழ் சூட்ட விரும்பி கட்டியெழுப்பிய மற்றோர் பொய் ஒன்றும் இப்போது அம்பலத்துக்கு வந்து விட்டது!

'தமிழ் மொழி மூலம் இருபாடங்களில் உயர் கல்வி—பல்கலைக் கழகத்தில் தமிழில் சமூகவியல் வாணிபவியல் படிக்க வசதி—கொழும்பில் இம்மாதம் வகுப்புக்கள் ஆரம்பமாகும்—சென்னைப் பல்கலைக்கழகம் நூல்களும் விரிவுரையாளரும் தந்து உதவி'

என்ற எட்டுபத்தி தலைப்பிட்டு 10-1-71ல் ஒரு முன்பக்க முகப்புச் செய்தியை வெளியிட்டிருந்தது தினபதி! அச்செய்தியில் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் வாணிபவியல் தமிழில் படிக்க வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் சென்ற ஆண்டு ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் வாணிப இயலை ஒரு பாடமாக எடுத்த 17 மாணவர்களுக்கும் இடம் தரப்படவிருக்கிறது என்றும் அமைச்சர் குமாரசூரியரின் முயற்சியால் இது நடைபெறுகிறதென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தமிழ் போதனை நடத்துவதற்கு குமாரசூரியரே காரணம் என்று கலாநிதி சதாசிவத்திடமிருந்து ஒரு பாராட்டுச் செய்தியும் எடுத்து பிரசுரித்திருந்தது!

கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி போதனைக்கு குமாரசூரியர் வசதி செய்துவிட்டதாகவும், சமூகவியல் வாணிபவியலைத் தமிழில் படிப்பதற்கு வசதி ஏற்பட்டுவிட்டதென்றும் குமாரசூரியரையும், அரசாங்கத்தையும்தூக்கி உச்சாணிக் கொப்பில்பாராட்டியும், தனதுவழமையான சாக்கடைக் குணத்துடன் தமிழரசார் மீது வசைபாடியும் தலையங்கம் வேறு தீட்டிலிருந்தார் தினபதியார் 12-1-71ல்!

ஆனால் அந்தோபரிதாபம்...! குமாரசூரியருக்கு தினபதியார் சூட்டிய புகழ் மாலை 13 நாட்கள் கூட நிலைக்கவில்லை!

அமைச்சர் குமாரசூரியர் தன் இஷ்டத்துக்கு ஏதாவது செய்வோமென்று அவர் நினைத்தாலும் கூட செய்ய அதிகாரமற்ற கொலுப் பொம்மையாக அவர் விளங்குகிறாரென்பதும் நாமறிவோம்!

தமிழ் மக்களின் உயர் கல்வியை நாசப்படுத்தியும் தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழ் மாணவர்க்கு கொடூரமான பாரபட்சம் காட்டி பழிவாங்கியும் இன ஒதுக்கல் திட்டத்தைக் கையாண்டு வரும் இன்றைய அரசிடம் தமிழ் மக்களின் நியாய பூர்வமான எந்த உரிமையையும் பெற்றுக் கொள்வது குதிரைக் கொம்பாகிவிட்டது! திரு. குமாரசூரியரால் எதையுமே உருப்படியாக தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியாதென்பதையும், தமிழ்பேசும் மக்களை அழிக்கவே திரு குமாரசூரியர் சிங்கள அரசாங்கத்தின் கைகளில் ஒரு கருவியாகப்பாவிக்கப்பட்டு வருகிறார் என்பதையும் நாம் உணர்ந்திருந்தோம். எனவே 'குமாரசூரியர் சாதனை' பற்றிய தினபதி செய்தி பொய் என்பதும் விரைவில் அதன் குட்டு உடையும் என்றும் எதிர் பார்த்திருந்தோம். நாம் எதிர்பார்த்தது நிகழ்ந்துவிட்டது எண்ணி 13 நாட்களில்!

ஆம் — தினபதி 23-1-71 இதழில் முன்பக்க முகப்புச் செய்தி திரு. குமாரசூரியரின் கையாலாகாத்தனத்தை எடுத்துக் காட்டிவிட்டது! அச் செய்தி தலைப்பு இதுதான்!

**வாணிபவியலில் உயர் கல்வி—தமிழில் படித்தவர்களுக்கு சிங்களத்தில் போதனையாம் - கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஏற்பாடான தமிழ் மூல போதனை நிறுத்திப்பெனரத்து- உபவேந்தருக்கோ தமிழ் வர்த்தக துறையினருக்கோ தெரியாதாம் - மாணவர்கள் அமைச்சர்களுக்கு முறையீடு—**

இதுதான் தினபதியின் தலைப்பு—ஆம் தினபதியார் 13 நாட்களுக்கு முன் குமாரசூரியருக்கு சூட்டிய புகழாரத்தை தாமே கழற்றி வீச வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுவிட்டது!

தமிழ் மாணவர்களுக்கும் சிங்களத்திலேயே போதனை நடத்திட அரசு துடிக்கிறது; இந்த அநியாயத்தை தடுத்திட வக்கில்லை அமைச்சர் குமாரசூரியருக்கு என்ற உண்மையை தினபதியே ஒப்புக் கொண்டுவிட்டது!

தமிழ் பேசும் இனத்தை அழித்தொழிப்பதுதான் அரசின் ஒரே நோக்கம். இந்த நோக்கம் இன்று தமிழ் மக்களுக்கு நன்கு புரிந்து விட்டது.

அமைச்சர் குமாசூரியரையும் மற்றும் அட்ரஸ் இல்லாத பிரமுகர்களையும் பிரபலப்படுத்தி அவர்களுக்கு முடிசூட்டி பொய்ச் செய்திகளை வெளியிட்டு உண்மையை நீண்ட நாட்களுக்கு தமிழ் மக்களின் கண்களிலிருந்து மறைத்துவிட முடியாது! இதை தினகரனும், தினபதியும் உணரட்டும்!




---

## தமிழரசுக்காரர் கரைச்சி இ. ச. தலைவர்

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள கரைச்சிக் கிராம சபையின் தலைவராக 4ம் வட்டார உறுப்பினரும் தமிழரசுக்கட்சி உறுப்பினருமான திரு. கார்த்திகேசு செல்லையா அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு. ஆனந்தசங்கரியின் செல்வாக்கு வீழ்ந்து வருவதை இது எடுத்துக்காட்டி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர் பட்டியலை வெற்றிப் பட்டியல் ஆக்கிக் காட்டுவீர்!

## தி. மு. கழக மாநாட்டில் கலைஞர் கருணாநிதி முழக்கம்!

கழக கண்மணிகளே நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிற நேரம் வந்துவிட்டது. இதே ஆவலோடும் ஆர்வத்தோடும், வெளியிடுகிற வேட்பாளர் பட்டியலை நீங்கள் வெற்றிப் பட்டியலாக்கிக் காட்டவேண்டும்.

மிகச்சிறோடும், சிறப்போடும்மாபெரும்ஊர்வலத்தை-பேரணியை இன்று காலை நடத்திக் காட்டியிருக்கிறீர்கள். ஊர்வலம் துவங்கிய தீவுத் திடலிலிருந்து மாநாடு நடைபெறுகிற இந்த இடம் எட்டு மைல் தொலைவு இருக்கிறது.

காலை 10 மணி அளவில் ஊர்வலம் துவங்கி மாலை இரண்டரை மணி அளவில் நாங்கள் இங்கு வந்து சேர்ந்தோம். நாங்கள் இங்கு வந்து சேர்ந்த நேரத்தில் ஊர்வலத்தின் பிற்பகுதி புறப்பட்ட இடத்திலே இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஊர்வலம் வந்த பாதை எட்டு மைல்: ஊர்வலத்தின் நீளமும் எட்டு மைல்.

### பசுமையான நினைவு

இதைச் சொல்கிற நேரத்தில்பசுமையான நினைவுகளைச் சோகத்தோடு சொல்லிக் கொள்கிறேன் இப்படிப்பட்ட ஊர்வலம் வருகிற நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களிடத்தில் சொல்வார்கள், ஊர்வலம் துவங்கிய இடத்திலிருந்து முடிவடையும் இடம்வரை இருக்கும்படி ஒரு ஊர்வலத்தை நடத்திக் காட்ட வேண்டுமென்பார்கள்இரண்டுஇரண்டு பேராக நிறுத்தினுல் வருமா: நாலு நாலுபேராக நிறுத்தினுல் வருமா? என்று கேட்பார். இன்றையதினம் அண்ணா அவர்கள் இருந்து இந்த ஊர்வலத்தை பார்த்து மகிழ முடியவில்லையே என்ற சோகந்தான் எங்களுக்கு ஏற்பட்டது.

அலை அலையாக மக்கள்—இரண்டு பேராக-நான்கு பேராக அல்ல, லட்சக்கணக்கில்கடலெனத் திரண்ட ஊர்வலத்தை-சென்னை நகர் வரலாறு காணாத-தமிழகத்தின் வரலாறு காணாத ஊர்வலத்தை நடத்திக் காட்டியிருக்கிறீர்கள்.

பாராளுமன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும் பொதுத் தேர்தல் என்று அறிவித்த நேரத்தில் இப்படி ஒரு மாநாடு நடத்த, இருக்கிற இடைக்காலம் போதாது. ஆகவே சிறிய அளவில் மண்டபத்தில் நடத்தலாம் என்று நானும் நாவலரும் யோசித்தோம்.

ஒரு நாள் நடத்துவதாக இருந்தாலும் பெரிய அளவில் தான் நடத்த வேண்டும் என்று நம்முடைய நண்பர்கள் கேட்டுக்கொண்டார்கள். எனவே இவ்வளவு பெரிய இடத்தை ஏற்பாடு செய்தோம்.

### எளியவன்!

விருகம்பாக்கம் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றிருந்த மகத்தான பொறுப்பு இந்த மாநாட்டில் மிக எளியவனுண என் கையில் தரப்பட்டு இருக்கிறது. நான் அதற்கு தகுதியுடையவனு? பொருத்தம் உள்ளவனு? லாயக்குள்ளவனு என்ற ஐயப்பாடு உங்களுக்கு இல்லாவிட்டாலும், நண்பர்களுக்கு இல்லாவிட்டாலும் எனக்கிருக்கிறது.

அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். எனக்கென்று குலப்பெருமை இல்லை-குடிப்பெருமை இல்லை பாரம்பரியம் இல்லை- சாதாரண மக்களின் பிரதிநிதி என்பதை தவிர வேறு எதுவும் இடையாது என்பார்கள்.

அந்த ஒரே ஒரு கருத்தை பதிய வைத்துக்கொண்டு இருக்கிறேனே தவிர வேறு என் உள்ளத்தில் எதுவும் இல்லை.

### திணறுகிறேன்

விருகம்பாக்கம் மாநாட்டில்எனக்குதிறப்பாளர் பணி அளிக்கப்பட்டது. அதைப் பற்றி அண்ணா அவர்களே காஞ்சி இதழில் எழுதி இருக்கிறார்கள். தம்பிதான் திறப்பாளன்-பெயரைக்கூட குறிப்பிடவில்லை—அவன் பேச்சில் தென்றலும் இருக்கும்—புயலும் வீசும் தேனுமிருக்கும். எல்லாவற்றையும் தனித்தனியே தருவான்: காரணம் பத்து லட்சத்தை திரட்டிக் கொடுத்து விட்டு அல்லவா பேசுகிறுன் என்று எழுதிக் காட்டினர்.

அதை எண்ணிக் கொண்டே இன்று உங்கள் முன் பேச நிற்கிறேன். பேசமுடியவில்லை. திணறுகிறேன். கண்கள் குளமாகின்றன. நெஞ்சத்துடிப்புநின்றுவிடும்போல் இருக்கிறது. நினைவுகளை நெஞ்சத்தில் தேக்கிவைத்து விட்டு வங்க கடற் கரையில் அந்த தங்க திருமகன் மீளா துயிலில் பள்ளி கொண்டு இருக்கின்ற காட்சியை எண்ணைப் பார்க்கிறேன்.

''வெற்றி அண்ணா'' என்று நாங்கள் சொல்ல வெற்றிலை குழம்புகிற வாயோடு ''அப்படியா'' என்று தட்டிக் கொடுக்க அவர் இல்லையே என்ற துயரம் ஏற்படுகிறது.

### புரட்சிக்கொடி

கொடியேற்றி வைத்த புரட்சி நடிகர் அவர்கள் புரட்சிகரமான உரையாற்றினார்கள். அவர் மட்டுமல்ல கொடியேற்றுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் புரட்சி கரமாகத்தான் உரையாற்றியவர்கள். இந்தக்கொடி புரட்சியிலே வந்த கொடி.

(கைதட்டல்)

கழக காளைகள் சிந்தியரத்தத்திலே நனைக்கப்பட்டது தான் சிவப்பு வண்ணம்.

கொடியேற்ற யார் வந்தாலும் புது முறுக்குடன்தான் வருவார்கள். இன்றைக்கு கூட தஞ்சை மாவட்டத்தில் உள்ள கும்பகோணத்தில் இருந்து தனி பஸ்சில் இந்த மாநாட்டுக்கு வந்த கழக காளை செங்கல்பட்டு அருகில் சிற்றுண்டி அருந்துகிறநேரத்தில், பஸ்சின் முகப்பில் கொடியைக் கட்டிய போது கீழே விழுந்து அந்த இடத்திலேயே உயர்போய் விட்டது.

### உறுதி எடுப்போம்


வேட்பாளர் பட்டியலை வெளியிடுகிற நேரத்தில் அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளைச் சொல்லிகழககண்மணிகள் சிந்தியரத்தத்தின் சாட்யாக உறுதி எடுத்து வேண்டுகோள் விடுகிறேன்.

எதிர்ப்புக்கு எதிர்ப்பு கொடுக்க தயார் என்ற முறையில் புரட்சி நடிகர் பேசினார் சிலபேர் அவர் படக் காட்சியிலே தான் குத்துச்சண்டை வீரர் என்று நினைத்திருப்பார்கள். உள்ளபடியே அவர் வல்லவர் என்பதை அனைவரும் [illegible] கொண்டு விட்டார்கள்.

கடமை கண்ணியம்—கட்டுப்பாடு இவைகளை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று அவர் சொன்னது எதிரிகளால் ஏற்பட்ட கொந்தளிப்பால் தானே தவிரபேசிய பிறகு அவரே, தான் சொன்னது சரிதானே என்று எண்ணியிருப்பார்.

அவரால் நிதி உதவி செய்யப்பட்டு மவுண்டு ரோட்டில் வைக்கப்பட்டுள்ள அண்ணாவின் சிலையை கடந்து அவர் செல்கிற நேரத்தில் சிலைக்கு கீழே எழுதி வைத்துள்ள கடமை—கண்ணியம் — கட்டுப்பாடு இவைகளை கீழேபார் என்று அண்ணாவின் சிலை சொல்லும்.

எங்களிடத்தில் உணர்ச்சி இருக்கிறது. நாங்கள் கொண்டு இருக்கிற அடக்கத்தின் காரணமாக தப்புக் கணக்குப் போட்டு விடாதீர்கள் என்ற முறையில்தான் புரட்சி நடிகர் பேசினார். நாளைக்கே களம் அமைப்போம். எத்தனைபேர்வருகிறீர்கள் என்ற முறையில் அல்ல. நாம் அமைக்கிற களம் ஜனநாயகக் களம், அந்தக் களத்திற்கு வருகிறவர் எத்தனை பெரிய கொம்பராக இருந்தாலும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.



### அலட்சியம் வேண்டாம்

நடைபெற இருக்கிற தேர்தல் சாதாரண தேர்தல் அல்ல. அரசாங்கத்தின் பணம் 5 கோடி ரூபாய்வரை செலவாகும் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆறு ஏழு கோடி ரூபாய் செலவிடுவார்கள். மொத்தத்தில் பத்திலிருந்து 15 கோடிவரை செலவு உயரக்கூடும்.

இந்தத் தேர்தலில் வாக்காளர்கள் அலட்சியம் காட்டக்கூடாது. அக்கறையோடு செயல்பட்டாக வேண்டும். தவறினுல் எதிர்காலத்தை இருள்மயமாக்க கையெழுத்துப் போட்டவர்களாவீர்கள்.

1967ல் மக்கள் உணர்ச்சியோடு இருந்தார்கள். அண்ணாவின் தலைமையில் அணி உருவாகியது. எதிர்த்தவர்களை வேரோடும், வேரடி மண்ணோடும், வீழ்த்திக் காட்டி அண்ணாவின் தலைமையில் ஆட்சிப்பொறுப் பேற்றோம்.

இன்றைக்கு நாங்கள் நான் கைந்து பேர் அமைச்சராக வரவேண்டும் என்பதோ நான் முதல்-அமைச்சராக வரவேண்டும் என்பதோ முக்கியமல்ல.

[illegible] இற்கு கதை எழுதி சம்பாதித்துக் கொள்வேன். நாவலர் நெடுஞ்செழியன் பல்கலைக்கழக துணை வேந்தராகலாம். அன்பழகன் பேராசிரியராகலாம், மாதவன் சிறந்த வழக்கறிஞராகலாம், ப. உ. சண்முகம் ஜவுளிக் கடை நடத்தலாம், என். வி. நடராசன் திராவிடன் ஆசிரியராகலாம். கழகத்தில் இருக்கிற நாங்கள் யாரும் பதவி போய்விடுமே என்று பயப்படவில்லை. கித்தாப்புடன் வாழ முடியாதே என்ற எண்ணமுமில்லை. ஆட்சி மாறுவதால் எங்களுக்கு ஆபத்து இல்லை.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் எங்களுக்கு கைலாகு கொடுக்கத் தவறமாட்டார்கள், ஆபத்து எல்லாம் உங்களுக்குத்தான். காங்கிரசார் வீடுதேடிவந்து-கதவைதட்டி எழுப்பி அமளிகள் செய்வார்கள். கொடுமைகள் செய்வார்கள். 57ல் நடந்த முதுகுளத்தூர் சம்பவம் தமிழகம் முழுவதும் நடக்கும். தாய்க்கு மகன் இருக்கமாட்டான், கணவனுக்கு மனைவி இருக்க மாட்டாள். மனைவிக்கு கணவன் இருக்கமாட்டான். அவள் கூந்தலுக்கு மலர் இருக்காது, நெற்றிக்குத் திலகமிருக்காது. காங்கிரஸ்காரர்கள் நடுத்தெருவில் விட்டு உதைக்கத்தயங்கமாட்டார்கள். நாம் ஆளும் கட்சியாக இருக்கிற இப்போதும் சில இடங்களில் அப்படி நடக்கிறது.

கோட்டையிலே இருந்தாலும் நாங்கள் யாரைப் பற்றி சிந்திக்கிறோம். மாளிகையில் இருந்தாலும் லெனின் சைபீரியாவில் இருக்கிற தொழிலாளிகளைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டு இருந்தான் என்ற வரலாற்றைப்பார்க்கிறோம். செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருந்தாலும் சேரியில் இருக்கிற குப்பனையும் சுப்பனையும் பற்றித்தான் எங்கள் நினைவு இருக்கிறது.

ஏழை எளியவர்கள் வாழ, பாட்டாளிகள் வாழ்வு பரவசமாகத்தான் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்று சொல்கிறோம். ஆட்சிக்குவர கூட்டுத் தேவையா? காமராஜரோடு பேசினுல் பதவிகளைப்பகிர்ந்து கொள்ள முடியாதா? அதற்கான பேரம் பேசப்படவில்லையா? இந்தப் புரத்தில் இருந்து அல்ல அந்தப் புரத்தில் இருந்து பேசப்பட்டது.

அந்தப்புரம் என்றுல் தவருக நினைக்காதீர்கள். காமராஜர் பக்கத்திலிருந்து பேசவில்லையா? நீங்கள் இங்கே வந்து தொலைத்து கொள்ளுங்கள், அங்கே நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம், இதற்காகத தூது வரவில்லையா?

### பேரம் தேவை இல்லை

இதை உங்களிடத்தில் சொல்லி வைக்கவேண்டும் என்பதற்காக சொல்கிறேன். பேரம்பேசி சோரம்போய் ஆட்சிக்கு வர கழகம் தயாராக இல்லை. எதிர்க்க ஜனநாயக களத்திற்கு வந்திருக்கிறோம்.

அங்கே காமராஜர் வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கிறர், இங்கே கழகம் தயாரிக்கிறது. கருணாநிதி அல்ல. கழகம் தயாரிக்கிறது-கீழ் மட்டத்தில் உள்ள தொண்டர்களிடம் ஆய்வுக்குழுவை அனுப்பி 9 பேர் கொண்ட ஆட்சி மன்றக் குழு பரிசீலித்து வேட்பாளர்களை முடிவு செய்து இருக்கிறோம். காமராஜர் வேட்பாளரை தேடச் செல்கிறர். இங்கே வேட்பாளர்கள் நம்மை முற்றுகையிடுகிறார்கள்.

இருப்பதோ 234 சட்டமன்ற தொகுதி. போட்டியிட விருப்பம் தெரிவித்தவர்கள் 744 பேர். 39 நாடாளுமன்ற தொகுதிக்கு 129 பேர் போட்டியிட விருப்பம் தெரிவித்தார்கள். மற்ற கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்தது போக என்னதான் தேர்ந்து எடுத்தாலும் மிச்சம் உள்ளவர்களுக்கு கோபம்தான் வரும். அந்த கோபம் இரண்டு நாளைக்கு இருக்கும். அது செல்லக்கோபம். செல்லக்கோபம் என்றுல் சென்று விடக் கூடிய கோபம் என்று பொருள்.

உங்களுக்கு வருகிற கோபத்தை எங்களிடத்தில் காட்டுங்கள். தனிப்பட்ட முறையில் என்னிடத்தில் வேண்டுமானாலும் காட்டுங்கள். என் வீட்டுக்கு வந்து சவுக்கடி வேண்டுமானாலும் கொடுங்கள். அண்ணா அண்ணா என்று சொல்லி அடியை வாங்கிக் கொள்கிறேன். வலிக்காது.

கழக வேட்பாளர் மீது தயவு செய்து உங்கள் கோபத்தை காட்டாதீர்கள். ஒரு வேட்பாளர் தானே தோற்றுல் என்ன என்று எண்ணாதீர்கள்.

---

### பழுகாமம் கி. ச. தலைவர்

பழுகாமம் கிராமசபைத் தலைவராக தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த பெரிய போரதீவு பொ. செல்லத்துரை அவர்கள், தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

---

## துடாவையைக்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறிய அவர் மறைமுகமாகத் தமிழ் பெற்றோரை தங்கள் குழந்தைகளுக்குச் சிங்களத்தில் கல்வியூட்ட நிர்ப்பந்திக்கும் முயற்சி இது என்றுர். அமைச்சர் எதுவித பதிலும் அளியாது புன்முறுவல் பூத்தார்.

சரி, இந்த விடயம் ஒருபுறம் இருக்கட்டும். தமிழ்ப் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களில் மொழி தமிழாய் இருப்பதற்கு உங்கள் அரசாங்கம் ஏன் தடையாய் இருக்கிறதென்றுர்ஈழவேந்தன். அமைச்சர் இதற்குப் பதிலாக நீதிமன்றங்களில் தமிழர் தமிழில் பேசலாம் என்றுர்.

இதற்கு ஈழவேந்தன் 'மன்னிக்க வேண்டும் அமைச்சர் அவர்களே! தமிழர் தமிழிற் பேசுவதை எவரும் தடுக்க முடியாது. ஆகவே தமிழ் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களில் வழக்காளி குற்றவாளி சாட்சிகள் ஆகியோர் தமிழிற்தான் பேசுவர். அதில் ஒரு புதினமும் இல்லை; யான் கேட்பது நீதிமன்ற நடவடிக்கைகள், தீர்ப்புகள் அவை பதியப்படும் மொழி எதுஎன்பதேயாகும், தமிழா சிங்களமா என்பதுதான் கேள்வி.

இக்கேள்விக் கணைகளைத் தாங்க முடியாத அமைச்சர் மீண்டும் புன்முறுவல் பூத்து இன்னுமொரு வசதியான நேரம் இவைபற்றி உரையாடுவோம் என்று கூறி விடை பெற்றுச் சென்றுர். நம்பி நம்பி ஏமாறும் தமிழ் இனத்திற்கு அமைச்சரின் இம்மழுப்பு விடைகள் நல்ல பாடமாய் அமையட்டும் என்று ஈழவேந்தன் எனக்குக் கூறினார்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி கோரிக்கைக்கு கிடைத்த தார்மீக வெற்றி!

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்திடின் இவை யாவும் தீரும். எனவே சிங்கள இளைஞர்கள் மொழிப் பிரச்சினையில் வீணைத் தலையுடைக்காது பொருளாதாரத்தை உயர்த்திட உழைக்க வேண்டும்' என்றன்றோ கூறியிருக்க வேண்டும்!

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு உபதேசம்; கொழும்பில் சிங்களவர் மத்தியில் இன்னோர் உபதேசம்; இதற்குப் பெயர்தான் 'மாக்சியம்' போலும்!

"ஒரு பொது அம்சத் திட்டத்தின்கீழ் மகாஜன எக்சத் பெரமுனவுடனும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடனும் சேர்ந்து ஓர் ஐக்கிய முன்னணியை 1963ம் ஆண்டு அமைத்தபோது சமசமாஜக்கட்சி தனது மொழிக் கொள்கையை மாற்றி விட்டது.

சிங்கள மொழி மட்டுமே நாட்டின் உத்தியோக மொழியாக இருக்க வேண்டுமென்ற சிங்களவர்களின் கருத்து ஒரு தற்காலிக கோஷமாகவே இருக்கும் என்று சமசமாஜக்கட்சி ஆரம்பத்தில் எதிர்பார்த்திருந்தது.

"ஆனால் காலம் செல்ல, சிங்களம் மட்டுமே ஒரே ஆட்சிமொழியாக இருந்திட வேண்டுமென்ற உறுதியான கருத்து பெரும்பான்மையான சிங்கள மக்களின் அடிமனத்தில் வேரோடி விட்டதென்பது தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது.

"ஆகவே மொழிப்பிரச்சினையில் நமது கொள்கையை மாற்றுவிட்டால் சோசலிசத்தை நோக்கி முன்னேறும் பிரதான வெகுஜன சக்தியிடமிருந்து விலகிச்செல்ல நேரிடுமென்பதையும் சிங்களத் தலைவர்களின் அபிலாஷையைப் பூர்த்தி செய்வதன்மூலமே தேசிய ஒற்றுமையை உருவாக்க முடியுமென்பதை சமசமாஜத் தலைவர்கள் உணர்ந்தார்கள். அதனால் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்றும், தமிழுக்கு 'நியாயமான அளவு இடம் தரப்படவேண்டுமென்றும் முடிவு செய்தனர்.

—இது நண்பா, சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளரும் போக்குவரத்து அமைச்சருமான லெஸ்லி குணவர்த்தன 21-12-70 டெயிலி நியூஸ் ஏட்டில் எழுதியிருந்த கட்டுரையின் ஒரு பகுதி. இதுபற்றி விமர்சிப்பதாகவும் முன்னர் ஒரு மடலில் உனக்குக் கூறியிருந்தேன் அல்லவா?

## மொழிப்பிரச்சினை சிங்களவருக்கு மட்டுமா?

பொருளாதாரப் பிரச்சினையைவிட சிங்களவர்கள் மொழிப் பிரச்சினையை முக்கியமாகக் கருதுகிறார்கள் என்பதற்காக தமது மொழிக் கொள்கையையேமாற்றியமைத்தசமசமாஜிகள் தமிழ் மக்களிடம் சென்று பொருளாதாரம் பேசுகிறார்கள்! தமிழர்களுக்கு மட்டும் மொழி வேண்டியதில்லை; சோறு தான் முக்கியம்; என்று இதோபதேசம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்!

"நாம் தமிழர்களுக்கு விரோதமானவர்களல்ல—கடந்த காலங்களில் தமிழ் மக்களை எம்மோடு இணையுமாறு நேசக்கரம் நீட்டியபோதெல்லாம் தமிழ் மக்கள் எம்மை உதாசீனம் செய்தார்கள்" என்றும் வருத்தப்பட்டிருக்கிறார் டாக்டர் என். எம்!

தமிழர்கள் சமசமாஜிகளை கடந்த காலங்களில் உதாசீனம் செய்ததில் தவறில்லையென்பதையும், அரசியல் தீர்க்கதரிசனத்துடன்தான் அவ்வாறு அவர்கள் நடந்துகொண்டார்கள் என்பதையும் மொழிப்பிரச்சினையில் இப்போது சமசமாஜிகள் அடித்துள்ள குத்துக்கரணமும் லெஸ்லி குணவர்த்தனவின் அறிக்கையும் தெளிவாக்கிவிட்டதன்றோ?

சமசமாஜிகளை தமிழ் மக்கள் நம்பி ஆதரித்திருப்பின் இன்று தமிழ் மக்கள் அனைவரையுமே தனிச் சிங்களக் கடலில் சமசமாஜிகள் மூழ்கடித்திருப்பர்; பெரும்பான்மைச் சிங்களவர்களின் ஆதரவை பெறுவதற்காக தமிழர்களின் முதுகில் குத்தியிருப்பர்; என்பதை இன்றைய அவர்களது பச்சோந்தித்தனம் காட்டிக் கொடுத்துவிட்டதன்றோ!

மற்றோர் உண்மையினையும் ஒப்புக்கொண்டிருக்கிறார் சமசமாஜத் தலைவர்—

'தமிழர்கள் மீது அன்பும் பரிவும் காட்டியதனால் நாம் தென்னிலங்கையில் பெரிதும் பாதிக்கப்பட்டோம்.'

என்று கூறியிருக்கிறார் அவர். இதன் பொருள்தான் என்ன? தமிழ் மக்களின் உரிமைக்காக வாதாடுபவர்களை சிங்களவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் — தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கிடும் பரந்த நோக்கு தென்னிலங்கையில் சிங்களவர் மத்தியில் தோன்றிடவில்லையென்பதன்றோ!

இந்நிலையில்—பெரும்பான்மை இனத்தினர் மத்தியில் செயற்படும் சிங்களக் கட்சிகள் தமிழ் பகுதிகளில் சென்று 'சோசலிசம்' 'தேசிய ஐக்கியம்' என்று பேசிடுவதெல்லாம் தமிழ் மக்களை ஏமாற்றி—சிங்கள ஆதிக்கத்தை தமிழ் மக்கள் மீது திணித்திடும் நோக்கத்துடனேயன்றி வேறில்லை என்பதை தமிழினத்தார் உணரவேண்டும்!

இன்று சிங்களவர்களின் விருப்பத்துக் கிணங்க 'சிங்களம் மட்டும்' சட்டத்தை ஏற்றிடும் சமசமாஜிகள், நாளை 'நியாயமான தமிழும்' வேண்டாம் என்று சிங்கள மக்கள் வலியுறுத்தத் தொடங்கின், அதையும் ஏற்றிடுவரென்பதற்கு ஐயம் ஏது?

## தமிழர் உணர்வை மதிக்காதவர்கள் !

சிங்களம் மட்டும் கொள்கை சிங்கள மக்களிடையே வேரூன்றி நிலைபெற்று விட்டதாக கூறி குத்துக்கரணமடித்திடும் சமசமாசக் கட்சியினர், அதேபோல சமஷ்டி அரசியல் கொள்கை தமிழ் பேசும் மக்களிடையே வேரூன்றி நிலைத்து விட்டதையும் சிங்களம் மட்டும் கோஷம் தென்னிலங்கையில் வலுக்கத்தொடங்கிய 1956ம் ஆண்டிலிருந்து தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் சமஷ்டியாட்சிக் கோரிக்கையை விடுத்து வருவதையும் ஏற்றுக்கொள்ள மறுத்திடுவது ஏன்? சிங்கள மக்களின் 'தேசிய உணர்ச்சியை மதித்து கொள்கையை சோரம் போக விட்டவர்கள் தமிழ் பேசும் மக்களின் தேசிய உணர்ச்சியை மட்டும் மதிக்க மறுப்பது ஏன்?

,புதிய அரசியலமைப்பினில் தமிழர்களும் நலன் பெறத்தக்க வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன!

என்றும் கூறியிருக்கிறார் டாக்டர் என்.எம். புதிய அரசியலமைப்பில் தமிழ் பேசும் மக்களுக்கு செய்யப்பட்டிருக்கும் "நலன்கள்" பற்றித்தான் சென்ற கிழமை மடலில் விரிவாகஎழுதியிருந்தேனே! ஒற்றையாட்சி சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் இந்நாட்டில் வலுவுடனமையவும், தமிழினத்தை அதன் மூச்சுக்கூட வெளியிற் கேட்காது நெரித்து கொல்லவுமே புதிய அரசியலமைப்பு வழிவகுக்கப் போகிறது! இதைத் தயாரித்திருப்பவரும் ஒரு சமசமாஜத் தலைவர்!

## கேலிக்குரிய சட்டம்

நண்பா, புதிய அரசியல் திட்டத்தில் 1958ம் ஆண்டின் தமிழ் மொழி, விசேட ஏற்பாடுகள் சட்டமும் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் இது தமிழ் மொழியின் உரிமைக்கு போதிய பாதுகாப்பாக இருக்குமென்றும் யாழ்ப்பாணத்தில் டாக்டர் என். எம். பேசிய கூட்டத்தில், வீ. பொன்னம்பலம் என்பவர் அலட்டியிருக்கிறார்! ஆனால் இச்சட்டத்தைப் பற்றி சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் சமசமாஜத் தலைவர்களில் ஒருவரான பேனுட் சொய்சா என்ன கூறியிருந்தார் தெரியுமா?

"நியாயமான அளவு தமிழ் உபயோகச் சட்டம் கேலிக்கிடமானது; தமிழில் கல்வி கற்றவர்கள் தமிழில் கடிதம் எழுதினால் அதே மொழியில் பதிலளித்திட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. அப்படியானால் ஒவ்வொரு வரும் தம் கல்வித்தகைமை, (மொழி) பற்றிய தராதரப் பிரதியை கடிதங்களுடன் இணைத்து அனுப்பவேண்டியதாகவும் வரலாமல்லவா...?

இப்படி "கேலிக்குரிய" சட்டமென்று அவர்களே கூறிய தமிழ் மொழிச் சட்டத்தை தூக்கி பிடித்துக்கொண்டு தமிழ் மக்களுக்கு ஏதோ பெரிய உரிமையை அரசியல் சட்டத்தில் இடம்பெற வைத்துவிட்டதாக தமிழ் மக்களை ஏமாற்றிட கொக்கரித்துத் திரிகிறார்கள் சமசமாஜிகளும் கம்யூனிஸ்டுகளும்!

'வடக்கில் தனிஇராச்சியம் அமைத்து விடுவதால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் யாவும் தீர்ந்து விடுமென்று திரு. செல்வநாயகம் நம்புகிறார். 10 இலட்சம் தமிழ் மக்களுக்கு தனி ராச்சியம் நிறுவினால்தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரம் எப்படிஇருக்கும் என்பதை ஒரு கணம் எண்ணிப்பாருங்கள்! வருடந்தோறும் தெற்கிலிருந்து வடக்கே எத்தனை கோடி ரூபா வருகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?'

என்றும் கேட்டிருக்கிறார் நிதியமைச்சர்.

நாம் கோருவது—தனிராச்சியம் அல்ல—சமஷ்டி அமைப்புக்குட்பட்ட தமிழரசு—மாநில சுயாட்சி என்பதை தெரிந்துகொள்ளாமல் டாக்டர் என். எம். இப்படி பேசியிருந்திருக்க மாட்டார்! ஆனால் சமஷ்டி கோரிக்கையை 'தனித் தமிழ் இராச்சியக் கோரிக்கை' யென்று கோயபல்ஸ் பிரசாரம் செய்திடுவதே டாக்டரின் திட்டம் என்பது நமக்குப் புரிகிறது!

[illegible] கவனித்துக்கொள்—தெற்கிலிருந்து வடக்குக்கு மாதந் தோறும் கோடி கோடியாக பணம் போகிறதாம்—தெற்கு, வடக்கு என்று நாட்டை பிரித்து தன்னையறியாமலே பேசுகிறார் தேசிய ஐக்கியம், சோசலிசம் என்றெல்லாம் பேசிடும் சமசமாஜத் தலைவர்! எங்கிருந்து இந்தக் 'கணக்கு' எடுத்தாரோ நிதியமைச்சர் இப்படிக்கூறி சிங்களவர்களின் செல்வங்களையெல்லாம் தமிழர்கள் சுரண்டிக் கொண்டு போகிறார்கள் என்ற வெறியுணர்ச்சியை ஊட்டிவிடப் பார்க்கிறார் டாக்டர் என். எம். பெரேரா!

தமிழர்கள் மட்டும் இன்று தென்னிலங்கையில் பிழைக்கவில்லை; சிங்களவர்களும் தமிழ் இலங்கையில் பிழைக்கிறார்கள் என்பதை ஏன் தான் மறந்தாரோ என். எம். பெரேரா! தமிழ் பேசும் மக்களின் நிலங்களையெல்லாம் சிங்களவர் அரசாங்க ஆதரவுடன் ஆக்கிரமித்து வருவதைப்பற்றி ஏது கூறுகிறார் இடதுசாரித் தலைவர்?

## தென்னிலங்கைப் பணமின்றி வாழவில்லையா?

தமிழருக்கு தனியரசு கிடைத்திடின், தென்னிலங்கைப் பணத்துக்கு எங்கே போவீர்கள் என்று கேட்டிருக்கிறார் என். எம்.! நண்பா, டாக்டருக்கு வரலாறு மறந்து விட்டது போலிருக்கிறது—1814ம் ஆண்டு தமிழ் இராச்சியம் வீழ்ச்சியடைவதற்கு முன்பு—தமிழர்கள் தமது பிரதேசத்தில் தமது ஆட்சியை நடத்திய நேரத்தில் தென்னிலங்கையா நமது மூதாதையர்களுக்கு பணம் கொடுத்து உதவியது? வேறு யார் கையையும் எதிர் பார்த்திடாமல் நம்மை நாமே ஆண்டுகொண்டிருந்திடவில்லையா?

இன்று நாம் 'தனியரசு' கேட்டிடவில்லை-சமஷ்டி அமைப்புக் குட்பட்ட தன்னாட்சிதான் கேட்கிறோம். சமஷ்டி அமைப்பில் இலங்கை குடிமகன் எவனும் இப்போது போலவே நாடு எங்கும் செல்லலாம்; விருப்பம்போல தொழில் நடத்தலாம்; அதற்கு பூரண உரிமையுண்டு. தென்னிலங்கையில் தமிழர்கள் வாழ்வதை சிங்களவர்கள் விரும்பவில்லையானால்—தமிழர்களை பிரிந்து போங்கள் என்று அவர்களே கூறுவார்களானால் அதற்கும் நாம் தயாராகத்தான் இருக்கிறோம்!

நண்பா, டாக்டர் என். எம். பெரேராவுக்கும் மற்றையோருக்கும் கூறுவோம்—நமது நாடு நமதானால்—நமது பிரதேசத்தை நாமே ஆளும் நிலை பிறந்தால் இந்நாட்டுத் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட நமக்கு வழிவகை தெரியும். தமிழர்கள் எத்துணை கஷ்டப்பட நேரிடினும்—எவ்வளவு தியாகம் புரிய வேண்டி வந்தாலும்—தங்கள் மொழியையும், இனத்தையும் மரபையும் காத்திட தமது பிரதேசத்தில் தமது சொந்த ஆட்சியை நிறுவியே தீருவது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். கூழைக் குடித்து வாழ்ந்தாலும் மாற்றார் தாளைப்பிடித்து வாழ்வதில்லையென்று தமிழர்கள் முடிவு செய்துவிட்டார்கள்!

அடிமைகளாக வாழ்ந்து — குற்றேவல் புரிந்துகொண்டு தங்கத் தட்டில் சம்பா அரிசிச் சோறு உண்பதைவிட சுதந்தசுதந்திர சுயாதீனமுள்ள மக்களாக மாறி தமது பிரதேசத்தில் தமது ஆட்சியை நிறுவி தமிழ்த்தாயை அரசுகட்டிலில் ஏற்றிப் பார்த்துவிட்டு அந்த மகிழ்ச்சியுடன் பட்டினியால் மாளவும்தயாராக இருக்கிறார்கள் தன்மானத் தமிழ் குலத்து இளைஞர்கள்!

சென்ற கிழமை இலங்கைக்கு வந்து சென்ற கனேடிய பிரதமரும், "சமஷ்டி ஆட்சி முறையே சிறந்த அமைப்பு; உள்நாட்டு பேதங்களையும், மொழிப் பிரச்சினைகளையும் மட்டுமன்றி, பல்வேறு பிரச்சினைகளையும் தீர்க்க சமஷ்டி அமைப்பே சிறந்த மார்க்கம்; என்று கூறியிருப்பது நமது இலட்சியத்துக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்!

கனடா ஒரு சமஷ்டி நாடு. அங்கு வாழும் பிரெஞ்சு பேசும் சிறுபான்மை இனத்தவர் தான் இங்கு வந்துசென்ற கனடாப் பிரதமர் திரு. பியரி எலியட் ட்ரூட்டோ! சமஷ்டி அமைப்பில் அங்கு ஒரு சிறுபான்மை இனத்தவர் பிரதமராக வரமுடிகிறது. ஆனால் இந்நாட்டிலோ, சமஷ்டியை 'பிரிவினை' என்று வர்ணிக்கிறார் 'இரட்டை டாக்டரான' என். எம். பெரேரா!

ஈழத்துக்கும் சமஷ்டியே பொருந்தும் என்பதை கனடாப் பிரதமர் வாய்விட்டுக் கூறாவிடினும்—உள்ளூர எண்ணுமலா இருந்திருப்பார்!

எனவே நமது இலட்சியம் நியாயமானது என்பதனை கனடாப பிரதமரும் மனப்பூர்வமாக ஏற்று ஆசி வழங்கி விட்டார்! எனவே விடுதலைப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்—சமஷ்டித் தமிழரசு காணுமட்டும் ஓய்வின்றி உழைத்திட உறுதி பூணுவோம்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


நானு விளையாட்டுப்பிள்ளை—ஆண்டவனே ஒரு விளையாட்டுப்பிள்ளைதானே இல்லையேல்

பேதை முத்தையாவின் (நடிகர் திலகம் சிவாஜிகணேசன்) வாழ்வில்தான்

எத்தனை திருப்பங்கள்—கவலைகள்—சந்தேகங்கள்

4வது வாரம் செல்லமகால்

காட்சியளிக்கும்

இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடி வெற்றியீட்டியது

* நடிப்புக்கு இலக்கணம் வகுத்த
சி வா ஜி க ணே ச ன்

* சிம்மக் குரலோனுக்கு ஈடுகொடுத்து
நடிக்கும் நாட்டியப் பேரொளி
ப த் மி னி —நடித்த—

★ மாட்டுச் சண்டைகள் ★ சிலம்புச் சண்டைகள் ★ மாட்டு வண்டிச் சவாரி
நிறைந்த ஈஸ்ட்மென் வர்ணப் படம்




ஜனத்திரள் பெருக்கெடுத்த வண்ணம் வெற்றி நடைபோடுகிறுள்

சென்ட்ரல் (மருதானை) ஜெஸீமா (கிராண்பாஸ்) ராணி (யாழ்நகர்)

நடிப்புலகமேதை
சிவாஜிகணேசன்

கலைச்செல்வி
ஜெயலலிதா

பாலாஜி நாகேஷ் சுந்தரராஜன் முத்துராமன் தேவிகா குமாரிசச்சு


நடித்த

சுஜாத்தாவின்

எங்கிருந்தோ வந்தாள்

(ஈஸ்ட்மென் கலர்)

தமிழ் திரையுலக வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் சித்திரம்
இப்பொழுது 3வது வாரம் அமோக வெற்றியுடன் காட்சியளிக்கிறது



இதுகதையல்ல! காவியமல்ல! தாய் நாட்டை அந்நியனுக்கே விலைபேசிய ஒருதுரோகியின் ஆட்சியை ஒழித்து மக்களாட்சி மலரச் செய்த ஒரு புரட்சி வீரனின் வெற்றி வரலாறு!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)

* நடிகர்திலகம் சிவாஜிகணேசன்

* காஞ்சனு

எம். என். நம்பியார்
நாகேஷ்
எஸ். வி. ரங்கராவ்
நடித்த

ஸ்ரீதரின்

சிவந்த மண்

ஈஸ்ட்மென் கலர்

கதை-வசனம்-டைரக்ஷன்
ஸ்ரீதர்

இப்பொழுது காட்சியளிக்கிறது கிங்ஸ்லி சப்பயர் மைலன்

ஜெய்சங்கர்
வாணிஸ்ரீ —நடித்த— கன்னிப் பெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகைகிலேசன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971ம் வருடம் பெப்ரவரி மாதம் 2-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது. —ஆசிரியர்: கோவைமகேசன்